கலைஞர் 100 1924 - 2023

தமிழரசு
Tamilarasu

(Monthly)

பிப்ரவரி 2024 (February 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 8

உலகின் முதல் பிரம்மாண்டமான
கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்
மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமம்

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை

அயலகத் தமிழர் தினம் 2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில்
12.1.2024 அன்று நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற
"அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன்,
வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட
அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
சோபகிருது வருடம்
தை - மாசி
பிப்ரவரி 2024

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 8

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. (குறள்- 636)

நூலறிவுடன் இயற்கையான மதிநுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சிதான் எதிர்த்து நிற்க முடியும்? முடியாது.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்க ஸ்பெயின் நாட்டில் “நமது முதல்வர்” 4

★ மதுரையில் ரூ.62.78 கோடியில் உலகின் முதல் பிரம்மாண்டமான “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்” 14

★ “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில் அயலகத் தமிழர்களுக்கான ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித் திட்டம் 20

★ ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஓசூர் மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்வு 30

★ தமிழ்நாட்டின் புகழ் மகுடத்தில், மற்றுமொரு மாணிக்க முத்திரை கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்-2023 34

★ ரூ.634.99 கோடி மதிப்பீட்டில் 1,666 புதிய பேருந்துகள் 40

★ ரூ.21.81 கோடிச் செலவில் 16 நவீன நெல் சேமிப்புத் தளங்கள் 49

★ தொழில் நிறுவனங்களுக்கு 70 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடாக ரூ.9.25 கோடி மானியம் 52

★ பெரியபாளையம், மேல்மலையனூர், ஆனைமலை ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் 56

★ காஞ்சிபுரத்தில் ரூ.1,003 கோடி முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மின்னணுச் சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 59

★ தமிழ்நாடு அரசின் சார்பில் குடியரசு நாள் விழா 65

★ வெண்புரவி - சிறுகதை 80

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களால் 24.01.2024 அன்று மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுர அடி பரப்பளவில் ரூ.62.78 கோடிச் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான **கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தைத்** திறந்து வைத்தார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்க ஸ்பெயின் நாட்டில் “நமது முதல்வர்”

தமிழ்நாட்டிற்குப் புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசுமுறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு 27.01.2024 அன்று இரவு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து புறப்பட்டு, 28.01.2024 அன்று மாலை ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மேட்ரிட் சென்றடைந்தார்.

மேட்ரிட் சென்றடைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு. தினேஷ் கே. பட்நாயக் அவர்கள் தூதரக அதிகாரிகளோடு மலர்கொத்து வழங்கி வரவேற்று, சந்தித்துப் பேசியபோது, ஸ்பெயின் பயணம் வெற்றி பெறுவதற்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

ஸ்பெயின் தொழில் அமைப்புகள் மற்றும் ஸ்பெயின் நாட்டில் செயல்படும் பெரும் தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் மாநாட்டை மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் நடத்த உள்ளார்கள். இம்மாநாட்டில் தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் பற்றியும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு வசதிகள், மனிதவள ஆற்றல் போன்றவற்றின் சிறப்பம்சங்களை விளக்கி, தமிழ்நாட்டிற்கு முதலீடுகளைப் பெருமளவில் ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருந்துறையில் புதிய குழாய்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு தொழில்துறை குழுமங்கள், முன்னணி நிறுவனங்களின் நிருவாகிகளுடன் 29.01.2024 அன்று தொழில் முதலீட்டு மாநாட்டில் கலந்துரையாடினார்கள்.

அதன் தொடர்ச்சியாக, 30.01.2024 அன்று ஸ்பெயின் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனங்களின் நிருவாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்துப் பேசினார்கள். அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்திட வலியுறுத்தினார்கள்.

ஆக்சியானா நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் Mr. Rafael Mateo அவர்களும், Mr. Manuel Manjon Vilda, CEO - Water Division அவர்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து பேசினார்கள்.

இச்சந்திப்பின்போது, காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சியிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருவது குறித்தும், இத்துறையில் பல பெரும் முக்கிய நிறுவனங்கள் ஏற்கெனவே தமிழ்நாட்டில் செயல்பட்டு வருவது குறித்தும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகளுக்கான தனிக்கொள்கை ஒன்றையும் வகுத்துத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது என்றும், எனவே இத்துறைகளில் சர்வதேச அளவில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாகிய ஆக்சியோனா நிறுவனத்தின் முதலீட்டிற்கு உகந்த இடமாகத் தமிழ்நாடு இருக்கும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இத்துறையின் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கினார்கள். இந்தக் கலந்தாலோசனையின் முடிவில் தமிழ்நாட்டில் இத்துறைகளில் முதலீடுகள் செய்ய ஆக்சியானா நிறுவனம் ஆர்வம் தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, பீங்கான், வீட்டுக் கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியில் உலக அளவில் முன்னணி நிறுவனமாகத் திகழும் ரோக்கா நிறுவனத்தின் சர்வதேச இயக்குநர் Mr.Carlos Velazquez அவர்களும் இந்திய இயக்குநர் திரு. நிர்மல் குமார் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள்.

இச்சந்திப்பின்போது, ரோக்கா நிறுவனம், தற்போது தமிழ்நாட்டில் பெருந்துறையிலும், இராணிப்பேட்டையிலும் செயல்பட்டு வரும் நிலையில், இந்தியாவில் இந்த நிறுவனத்தின் விற்பனையை மேலும் உயர்த்திடவும், சர்வதேச ஏற்றுமதிக்காகவும், இதன் விரிவாக்கத்தையும் புதிய தொழில் அலகுகளையும் தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களும் இத்துறையில் முதலீடு செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாட்டில் நிலவி வரும் சாதகமான சூழல் பற்றி விளக்கினார்கள்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், ரோக்கா நிறுவனம் ரூ.400 கோடி முதலீடு செய்வதற்காக உறுதி அளித்துள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் புதிய குழாய்கள், இணைப்புகளை உற்பத்தி செய்யும் புதிய தொழிற்சாலையை நிறுவிடவும், இராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் தற்போது செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்யவும் ரோக்கா நிறுவனம் முன்வந்துள்ளது. இதனால் 200 நபர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

தூத்துக்குடியில் தளவாட வசதிகள் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாட்டின் பரவலானத் தொழில் வளர்ச்சிக்குச் சரக்கு போக்குவரத்தினைத் திறமையாகக் கையாளுவது மிகவும் அவசியமானதாகும். தமிழ்நாட்டில் உள்ள நான்கு பெரும் துறைமுகங்களைப் பயன்படுத்தி, சரக்குகளைக் கையாளும் கண்டெய்னர் துறைமுகங்கள், சரக்குப் போக்குவரத்துப் பூங்காக்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளைத் தமிழ்நாட்டில் அமைத்திட பல்வேறு முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகின்றது. இத்துறைக்கான தனிக்கொள்கை ஒன்றும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

ஹபக் லாய்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

அந்த வகையில், சரக்கு முனையங்கள், சரக்குக் கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமாக திகழக் கூடிய ஹபக் லாய்டு (Hapag-Lloyd) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் Mr. Jesper Kanstrup மற்றும் இயக்குநர் Mr. Albert Lorente ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 31.01.2024 அன்று சந்தித்துப் பேசினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துரைத்து, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இக்கூட்டத்தில், ரூ.2,500 கோடி முதலீட்டில், தூத்துக்குடி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தளவாட வசதிகள் அமைத்திட இந்நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இம்முதலீடு 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, தமிழ்நாட்டின் எதிர்காலத் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

தமிழ்நாட்டின் சாலைக் கட்டமைப்பில் முதலீடு செய்வது தொடர்பாக அபர்ட்டிஸ் நிறுவனத்தின் நிருவாகியுடன் சந்திப்பு

அதனைத் தொடர்ந்து, சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனமான அபர்ட்டிஸ் நிறுவனத்தின் Laura Berjano, International and Institutional Relations Head அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின்போது, இந்தியாவிலேயே அதிகமான சாலை அடர்த்தியும், தரமான சாலைக் கட்டமைப்பும் தமிழ்நாட்டில் உள்ளன என்பதையும், தொழில்வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இந்தச் சாலைக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தி, அபர்ட்டிஸ் நிறுவனம் தமிழ்நாட்டின் சாலைக் கட்டமைப்பில் மேலும் முதலீடு செய்யவேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். தமிழ்நாட்டின் மாநில நெடுஞ்சாலைக் கட்டமைப்பில் முதலீடுகளை மேற்கொள்ளவும் அபர்ட்டிஸ் நிறுவனம் ஆர்வம் தெரிவித்துள்ளது.

ஸ்பெயின் தமிழர்களுடன் முதல்வர்

அதனைத் தொடர்ந்து, “ஸ்பெயின் தமிழர்களுடன் முதல்வர்” எனும் நிகழ்வில் ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்களிடையே 04.02.2024 அன்று கலந்துரையாடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

தமிழ்நாட்டில் இருக்கிறோமா அல்லது வெளிநாட்டில் இருக்கிறோமா என்று எனக்கு இப்போது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்பெயின் நாட்டிற்கு இப்போதுதான் நான் முதல்முறை வருகிறேன். ஆனால், பலமுறை வந்ததைப் போன்ற உணர்வைத் தரும் வரவேற்பை நீங்கள் அளித்திருக்கிறீர்கள். கடல் கடந்து வந்து வெளிநாட்டில் வாழும் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் பிறந்த உங்களுடைய தாய் மண்ணான தமிழ்நாட்டிற்கு உங்களால் முடிந்த அனைத்து

உதவிகளையும், செய்து கொண்டிருக்கிறீர்கள்; செய்யப் போகிறீர்கள்; செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அயல்நாட்டில் இருக்கக்கூடியவர்களுக்காகவே துணைநிற்க வேண்டும் - உதவி புரியவேண்டும் - அவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் - ஆபத்து ஏற்பட்டால், அதற்குத் தமிழ்நாடு துணை நிற்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். ஆனால், சில நாட்களுக்குள் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதனால் அது செயல்படாமல் போய்விட்டது.

இப்போது மீண்டும் தலைவர் கலைஞர் வழியில் நடைபோடும் நமது திராவிட மாடல் ஆட்சி உருவாகி இருக்கிறது. தலைவர் கலைஞர் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அதனை நாங்கள் செய்யக் காத்திருக்கிறோம்; தயாராக இருக்கிறோம்.

அண்மையில் கூட, வெளிநாடுகளிலிருக்கும் தமிழர்களைச் சென்னைக்கு வரவழைத்து, அவர்களுடன் கலந்து பேசி; இதுவரை அவர்களை இரண்டு மூன்று முறை அழைத்துக் கூட்டம் போட்டுக் கலந்து பேசி, அவர்களது பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்திருக்கிறோம்.

உலக முதலீட்டாளர் மாநாட்டை அண்மையில் வெற்றிகரமாக நடத்தி, அதன் மூலமாகத் தமிழ்நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கிறோம். அது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கு மட்டுமல்ல; இந்தியாவைக் கடந்து, இன்றைக்குக் கடல் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுக்கும் அது பெருமைதான்!

பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தாலும், இந்த ஸ்பெயின் நாட்டிற்கு வந்திருப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்; பெருமைப்படுகிறேன். என் மீது ஒவ்வொரு வரும் பாசமும் நேசமும் அன்பும் கொண்டு அளித்த அந்த உபசரிப்பு என்னை நெகிழ வைத்து இருக்கிறது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

எடிபான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.02.2024 அன்று ஸ்பெயின் நாட்டின் மேட்ரிட் நகரில், வாகன உதிரிப் பொருட்கள் தயாரிப்பில் உலகின் முன்னணி நிறுவனமான கெஸ்டாம்ப் நிறுவனம், பொறியியல் வடிவமைப்பு, தொழிற்கல்விக்கான கருவிகளை உற்பத்தி செய்யும் எடிபான் நிறுவனம், இரயில் உற்பத்தித் துறையில் முன்னணி நிறுவனமான டால்கோ நிறுவனம், உயர்தொழில்நுட்ப உயிரியல் பொருள்களின் ஆராய்ச்சியையும் உற்பத்தியையும் மேற்கொள்ளும் மேப்ட்ரீ நிறுவனம் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த உயர் நிருவாகிகளைச் சந்தித்து, வளமான வாய்ப்புகள் உள்ள தமிழ்நாட்டில் நிலவும் தொழில் முதலீட்டுக்கான சூழல்களை எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின் பலனாக எடிபான் நிறுவனத்துடன் ரூ.540 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 07.02.2024 அன்று சென்னை, விமானநிலையத்தில் செய்தியாளர்கள் சந்திப்பின்போது ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்!

உங்கள் வாழ்த்துக்களை எல்லாம் பெற்று ஸ்பெயின் நாட்டுக்குச் சென்ற நான் தமிழ்நாட்டுக்குப் பல்வேறு முதலீடுகளை ஈர்த்துவிட்டுத் திரும்பி இருக்கிறேன். அந்த வகையில் இது மிகப்பெரிய சாதனைப் பயணமாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசுமுறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டுக்குக் கடந்த ஜனவரி 29ஆம் தேதி சென்றேன். முதல் நிகழ்வாக, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணித் தொழில் நிறுவனங்களின் நிருவாகிகள் பங்கேற்கும் முதலீட்டாளர் மாநாடு நடந்தது. அதற்கு ஸ்பெயின் நாட்டில் இருக்கின்ற பல்வேறு தொழில்துறை குழும நிருவாகிகள் எல்லாம் வந்திருந்தார்கள்.

- ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள்
- ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள்
- இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தேன்.

தமிழ்நாட்டில், தொழில் தொடங்குவதற்கு இருக்கக் கூடிய உகந்த சூழல் பற்றி அங்கே எடுத்துச் சொல்லி, நம்முடைய மாநிலத்தில் முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். அதன் தொடர்ச்சியாக, அடுத்தடுத்த நாட்களில் ஸ்பெயின் நாட்டில் செயல்படுகின்ற முன்னணி நிறுவனங்களுடைய நிருவாகிகளைத் தனித்தனியாக நேரில் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யவேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். சில முக்கிய நிறுவனங்களின் பெயர்களை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

- காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் மறுசுழற்சியிலும் முன்னணி நிறுவனமான ஆக்சியானா நிறுவனம்
- உயர்தர வீட்டுக் கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியிலும், பீங்கான் பொருட்கள் உற்பத்தியிலும் உலகின் முன்னணி நிறுவனமான ரோக்கா நிறுவனம்



❖ கண்டெய்னர் முனையங்கள், சரக்கு பூங்காக்களை அமைப்பதில் சிறந்த நிறுவனமான ஹபக்-லாய்டு நிறுவனம்

❖ சர்வதேசத் தரத்தில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை அமைக்கக்கூடிய அபர்ட்டிஸ் நிறுவனம்

❖ மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தியில், உலகின் முன்னணி நிறுவனமாக இருக்கின்ற கெஸ்டாம்ப் நிறுவனம்

❖ இரயில்வே சார்ந்த உற்பத்தி தொழிலில் உயர் தொழில்நுட்பத்துடன் செயல்படக்கூடிய டால்கோ நிறுவனம்

❖ பொறியியல் வடிவமைப்பு மற்றும் பொறியியல் கல்வித் திறன் பயிற்சிக்கான நவீனக் கருவிகளை உற்பத்தி செய்கின்ற எடிபான் நிறுவனம்

❖ உயிரியல் ஆராய்ச்சி, மருந்து உற்பத்தி நிறுவனமான மேப்ட்ரீ நிறுவனம்

- ஆகிய நிறுவனங்களின் நிருவாகிகளை எல்லாம் நான் சந்தித்தேன். இந்த நிறுவனங்களின் நிருவாகிகள் எல்லோரும் தங்களுடைய தொழில் திட்டங்களை விளக்கியும், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தங்களுடைய ஆர்வத்தையும் தெரிவித்தார்கள்.

இந்த முயற்சிகளின் பயனாக, ரூ.3,440 கோடி அளவுக்கு முதலீடுகள் செய்வதற்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ஹபக் லாய்டு நிறுவனம் – ரூ.2,500 கோடி முதலீடு.

❖ எடிபான் நிறுவனம் – ரூ.540 கோடி முதலீடு.

- ரோக்கா நிறுவனமும் ரூ.400 கோடி முதலீடு செய்வதாக உறுதியளித்திருக்கிறது.

இந்த நிறுவனங்கள் மட்டுமல்லாமல், மற்ற நிறுவனங்களும் அடுத்தடுத்து எதிர்காலத்தில் தங்களுடைய முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழ்நாடு குறித்தும், கழக அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான 'நியூயார்க் டைம்ஸ்' வெளியிட்டுள்ள செய்தியை நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள்.

உற்பத்தித் துறையில் சீனாவுக்கு மாற்றாக, இந்தியா கருதப்பட்டு வரும் இந்த வேளையில், அந்த உற்பத்தித் துறையில் முந்திச் செயல்படுகின்ற மாநிலமாகத் தமிழ்நாடு முன்னேறி வருவதையும், பெரும் அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகள் பல தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அந்தச் செய்தி சுட்டிக்காட்டி இருக்கிறது.

இந்தியா பயணிக்கக் கூடிய பாதையில், முந்தி பயணிப்பது மட்டுமல்ல, தமிழ்நாடு தனக்கென்று தனிப்பாதை ஒன்றை வகுத்துச் செயல்பட்டு வருவதாகவும், முதல் பக்கத்தில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது, அதைப் பாராட்டியும் இருக்கிறது. இது போன்ற பாராட்டுகள்தான் எங்களை மேலும் உற்சாகப்படுத்திச் செயல்பட வைக்கிறது.

தமிழ்நாட்டைத் தொழில்துறையில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்தும் எங்கள் பயணத்துக்கு ஸ்பெயின் பயணம் மிகமிகப் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இதுபோன்ற அடுத்தடுத்த பயணங்கள் திட்டமிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மாபெரும் தொழிற் புரட்சிக்கான அடித்தளம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் வள்ளுவர் கோட்டம், தருமபுரியில் அதியமான் கோட்டம் எனத் தமிழ் வளர்க்கும் கோட்டங்களை அமைத்தார்கள்.

அதுபோல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021இல் பொறுப்பேற்றது முதல் இந்தியாவின் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புதிய முதலீடுகளை ஈர்த்துத் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைப் புதிது புதியதாக அமைத்துத் தமிழ்நாட்டை ஒரு தொழில் கோட்டமாக உருவாக்கிடும் முயற்சியில் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சிப் பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கியப் பங்களிக்கிற மாநிலமாகவும் தமிழ்நாட்டை உயர்த்திடும் பெரும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு முனைப்புடன் செயல்படுகிறது.

அதன் முதற்கட்டமாக, முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் ரூ.1,90,803 கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு 17,371 பேருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், ரூ.7,441 கோடி மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

மூன்றாம் கட்டமாக, 2024 ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு அரசு நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவாக, ரூ.6,64,180 கோடி முதலீடுகளும், அவற்றின் மூலம் 14,54,712 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும் 12,35,945 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் 26,90,657 வேலைவாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

நான்காம் கட்டமாக 27.01.2024 அன்று புறப்பட்டு ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று அங்குள்ள பொருளாதாரம், வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்புப் பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சந்தித்துத் தமிழ்நாட்டிலுள்ள தொழில் வாய்ப்புகளையும், அரசு வழங்கும் சலுகைகளையும், கிடைக்கும்

திறன்வாய்ந்த மனித வளத்தையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். அவற்றின் பயனாக ரூ.3,440 கோடி அளவிற்குத் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாடு குறித்தும், தமிழ்நாடு அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான 'நியூயார்க் டைம்ஸ்' செய்தி வெளியிட்டு பாராட்டியது.

'ஆண்டுவாரி முதலீட்டாளர்கள் சந்திப்பு 2022 நடைபெற்றபோது ஆசிய-ஓசியான மண்டலத்திற்கான சிறந்த முதலீட்டு நிறுவனத்திற்குரிய விருது தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

புதிய தொழில் முதலீட்டாளர்கள் ஒப்பந்தங்கள் செய்துள்ள நிலையில் தமிழ்நாட்டைப் பெரிய அளவில் தொழில்மயமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கி உருவாக்கப்படுகிறது. இதற்காக, சிப்காட் நிறுவனம் ஏறத்தாழ 33,489 ஏக்கர் நிலம் தெரிவு செய்துள்ளது. இதில், 22,941 ஏக்கர் நிலம் அரசின் நிருவாக அனுமதி பெற்று கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 27 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 74,757 இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

இப்படித் தொழில் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்படுவதுடன், ஒப்பந்தங்கள் தொழில் நிறுவனங்களாக உருப்பெறத் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். இந்தக் குழுவின் தொடர் நடவடிக்கைகளின் மூலம் பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் அடுத்தடுத்து உருவாகும் வாய்ப்பு உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூ.8.65 இலட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன் மூலம் ஏறத்தாழ 30 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சிக்காலம் ஒரு மாபெரும் தொழிற்புரட்சிக்கான அடித்தளம் என்பதை வெளிப்படுத்துகிறது.

மதுரையில் ரூ.62.78 கோடியில் உலகின் முதல் பிரம்மாண்டமான “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.01.2024 அன்று, மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் ரூ.62.78 கோடிச் செலவில் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தைத் திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டிகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 24.01.2024

தமிழ்ச் சமுதாயத்தின் முக்கிய பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் விழாவின்போது, தமிழ்நாடு முழுவதிலும் காளையை இளைஞர்கள் அடக்கும் வீரத்தைப் புலப்படுத்தும் ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருகிறது. தமிழர்தம் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்திடும் வகையில் “அலங்காநல்லூரில்

ஜல்லிக்கட்டுக்கென்றே தனியாக பிரம்மாண்டமான மைதானம் அமைக்கப்படும்" என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110ன்கீழ் 21.04.2022 அன்று அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில் ஏறுதழுவுதல் போட்டிகளுக்கென ஒரு பிரம்மாண்டமான அரங்கத்தினைக் கட்டுவதற்காக 03.02.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கென ரூ.62.78 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

அதன்படி, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, நவீன வசதிகளுடன் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில்:

வாடிவாசல்

வாடிவாசல் வழியாக காளைகள் அடக்கிப் பிடிக்கும் பகுதிக்கு விடப்படுகின்றன. இங்குக் காளைகள், விளையாட்டு அமைப்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 6 மீட்டர் நீளமுள்ள வாடிவாசலின் சுவற்றில் ஜல்லிக்கட்டின் சிறப்பினை விளக்கிடும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன,

5,000 பார்வையாளர்கள் அமரும் மூன்றடுக்கு மாடம்

இந்த அரங்கில், அரை வட்டவடிவிலான இருக்கை கொண்ட மூன்றடுக்குப் பார்வையாளர் மாடங்கள், தரைமட்ட அளவிலான இருக்கையும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சுமார் 50 நபர்கள் அமரும் வகையில் குளிரூட்டப்பட்ட பார்வையாளர் மாடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

காளைகள் காத்திருப்பு, தயார்நிலை கூடமும்

வாடிவாசல் நுழையும் முன் காளைகள் காத்திருப்பதற்காக இப்பகுதி பயன்படுத்தப்படும். இப்பகுதியில் ஒரே நேரத்தில் 300 காளைகள் காத்திருக்கும் வகையில் 10,850 சதுர அடி பரப்பளவில் தேவையான தடுப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது,

காயமடைந்த காளைகளுக்குச் சிகிச்சை அளித்திட கால்நடை மருந்தகம்

காயமடைந்த காளைகளுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளித்திடும் வகையில் 1,676 சதுர அடி பரப்பளவில் கால்நடை மருந்தகம் ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த வீரர்களுக்குச் சிகிச்சை அளித்திட துணைச் சுகாதார நிலையம்

காயமடைந்த வீரர்களுக்கு உடனடியாக அவசர மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் 853 சதுர அடி பரப்பளவில் துணைச் சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏறுதழுவுதல் போட்டி நடைபெறும்போது அவசர மருத்துவ உதவிக்காக 10 அவசரகால ஊர்திகள் இம்மையத்தின் அருகிலேயே நிறுத்தி வைக்கப்படும்.

அருங்காட்சியகம்–1

சிந்து சமவெளி நாகரிகம் முதல் சமகாலம் வரை காளைகள், காளை விளையாட்டுகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் 3,390 சதுர அடி பரப்பளவிலான குளிரூட்டப்பட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில், பண்டைய சங்க கால இலக்கியங்களில் நடந்த காளைகள், காளை விளையாட்டுகள் தொடர்பான சிற்பங்கள், சுவரோவியங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள்,

கல்வெட்டுக்களின் பிரதிகள், கல்வெட்டுச் சான்றுகள் நிறைந்துள்ளன.

அருங்காட்சியகம்-2, நூலகம், ஒலி ஒளிக் காட்சிக்கூடம்

காளைகள், காளை வளர்ப்பவர்களின் உணர்வுப்பூர்வமான பந்தத்தைப் பறைசாற்றும் வகையில் 3,821 சதுர அடிப் பரப்பளவில் ஒரு குளிரூட்டப்பட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கலைப் பின்னணியுடன் காளை ரைடருடன் (Bull Rider) குழந்தைகள் விளையாடுவதற்கு ஒரு தனிப் பகுதியும், காளை / மாடுபிடி விளையாட்டுகளைப் பற்றிய புத்தகங்கள், பிற இலக்கிய ஆதாரங்களின் நகல்களின் விரிவான தொகுப்புகளுடன் ஒரு பிரத்யேக நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அரிய பனை ஓலைக் கல்வெட்டுப் பிரதிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காளை விளையாட்டுகள் பற்றிய காட்சிப்படத்தைக் காண 100 பேர் அமரக்கூடிய ஒலி ஒளிக் காட்சிக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளன.

கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில், முக்கிய பிரமுகர்கள் மாடம், ஓய்வறைகள், நிருவாக அலுவலகம், ஊடகவியலாளர்கள் கூடம், தற்காலிக விற்பனைக் கூடம், கழிவறைகள், பொருட்கள் வைப்பறை, மாடுபிடி வீரர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறை, மின் தூக்கிகள், தீயணைப்பு வசதிகள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், பிரதான முகப்பு நுழைவு வாயில், உட்புறத் தார்சாலை வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, புல் தரை, 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை, தரைத்தள நீர்தேக்க தொட்டிகள், இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள், காளைகள் உரிமையாளர்கள் ஓய்விடம், தற்காலிக விற்பனைக் கூடம், 85,000 சதுர அடிப்பரப்பளவில் இயற்கையைப் பிரதிபலிக்கும் வண்ணம் பலவகையான வண்ணங்களுடன் கூடிய செடிகள் கொண்ட தோட்டம் எனப் பல்வேறு வசதிகளுடன் பொதுப்பணித்துறையின் மூலம் இந்த அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, அங்கு நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை, ஏறுதழுவுதல் சிலையைத் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏறுதழுவுதல் போட்டியைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்து, பார்வையிட்டார். ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்குத் தங்க மோதிரம் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்!

வீரதீர விளையாட்டுக் களத்தைத் திறந்து வைக்க வந்திருக்கிறேன். மதுரையை தூங்கா நகரம் என்பார்கள். போட்டி என்று வந்துவிட்டால், தோல்வியைத் தூள்தூளாக்கும் நகரம் என்பதை வாடிவாசல் ஆண்டுதோறும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

தமிழர் பண்பாட்டு விளையாட்டான ஏறுதழுவுதலுக்குச் சங்கம் வளர்த்த மதுரையில் இந்த மாபெரும் அரங்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசால் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. அதுவும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடுகிற ஆண்டில் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பு!

பல்லாயிரம் ஆண்டு பெருமை கொண்ட நம்முடைய தமிழினம் கொண்டாடும் ஏறுதழுவுதலுக்கான அரங்கத்தைக் கட்டி எழுப்பியவன் இந்த ஸ்டாலின் என்று வரலாற்றில் என்னுடைய பெயர் இடம்பெறுவது எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெருமை!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, மூன்று ஆண்டுகள்தான் ஆகியிருக்கிறது. அதற்குள்ளாக, மூன்று முக்கியமான கம்பீரச் சின்னங்களை இந்த மதுரையில் ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஒன்று, தமிழினத்தினுடைய பழமையை சொல்கின்ற கீழடி அருங்காட்சியகம் மதுரைக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, கலைஞரின் பெயரால் மாபெரும் நூலகம் பிரம்மாண்டமாக மதுரை மாநகரில் அறிவு மாளிகையாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது மூன்றாவதாக, இந்தக் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஜல்லிக்கட்டுக்கு பெயர்போன அலங்காநல்லூரில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதைச் சொல்லுகின்ற நேரத்தில், 2015ஆம் ஆண்டு அறிவித்து, இன்றைக்கு வரைக்கும் மதுரைக்கு மத்தியில் இருக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க அரசால் கொண்டு வரப்படாத ஒரு திட்டம் இருக்கிறதே, அது உங்கள் ஞாபகத்திற்கு வந்தால், அதுக்கு நான் பொறுப்பில்லை!

இந்த அரங்கத்தைக் கம்பீரமாகவும், அழகாகவும் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களைப் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்! அவருடைய சாதனைப் பட்டியலில், இப்போது இந்தக் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கமும் சேர்ந்துவிட்டது.

சென்னையில், கலைஞர் நினைவகமும் விரைவில் திறக்கப்பட இருக்கிறது. இந்த விழாவை மிகப் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்துள்ளார் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. மூர்த்தி அவர்கள்.

தை மாதம் பிறந்தாலே மாண்புமிகு மூர்த்தி, ஜல்லிக்கட்டு மூர்த்தியாக மாறிவிடுவார். கோட்டைக்குக்கூட வராமல் ஜல்லிக்கட்டு மைதானத்திலேயே இருந்துவிடுவார். அந்தளவுக்கு ஏறுதழுவுதலைத் தனது உயிராகக் கருதக்கூடிய மூர்த்தியை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

இங்கே அமைந்திருக்கும் இந்த பண்பாட்டுச் சின்னம், தமிழினத்தின் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி! சிந்து சமவெளிக் காலத்து முத்திரைகளிலேயே திமில் காளைகள் இருக்கின்றன. அதில் காளைகளின் நேர்கொண்ட பார்வையை நாம் பார்க்கலாம்.

பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பிருந்த ஓவியங்களில், திரண்டு தொங்கும் தாடை, அகன்று வளைந்த கொம்பு கொண்ட காளைகள் இருக்கின்றன! ஏன், கீழடியில் திமிலுள்ள காளையின் முழு எலும்புக் கூடு கிடைத்திருக்கிறது! முல்லை நில மக்களுடைய வீர

விளையாட்டாக இருந்திருக்கிறது! பழந்தமிழ் இலக்கியங்களிலும் இதைப்பற்றி உயர்வாக பாடப்பட்டிருக்கிறது.

"எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்" என்று ஏறுதழுவுதல் காட்சியை நம்முடைய கண்முன்னே கொண்டு வருவது கலித்தொகை. தை மாதம் தொடங்கிப் பொங்கலுக்காக முதல் மூன்று நாள், அரசு கருவூலத்தைத்தவிர மற்ற பொது அலுவலகங்களை மூடவேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு கவர்னர் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

தமிழர்களின் பண்பாட்டைச் சரியாக அறிந்தவர்களாக, அந்தக் காலத்து கவர்னர்கள் இருந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் தை மாதம் ஏறுதழுவுதல் நடக்கும்போது அலங்காநல்லூரும், அவனியாபுரமும், பாலமேடும் உற்சாகத்தோடு காணப்படும்!

இந்தப் பண்பாட்டுத் திருவிழா உலகம் முழுவதும் பேசப்படும் என்றுதான், இந்த அரங்கத்தை அமைக்கின்ற முடிவை எடுத்தோம். தலைவர் கலைஞருக்கு ஏறுதழுவதல் போட்டி மேல், தனி பாசம் உண்டு! அதனால்தான், தன்னுடைய மூத்த பிள்ளையான முரசொலியின் சின்னமாக, ஏறுதழுவுதல் காட்சியை வைத்தார்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்தியவர் கலைஞர். ஜல்லிக்கட்டு, ரேக்ளா ரேஸ் போன்றவற்றை 2006ஆம் ஆண்டு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை தடை செய்த போது, பாதுகாப்பான முறையில் நாங்கள் நடத்துவோம் என்று உறுதி அளித்து, அனுமதியைப் பெற்றவர் தலைவர் கலைஞர்.

2007ஆம் ஆண்டு மாண்பமை உச்சநீதிமன்றம், ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்தபோதும், தடையை நீக்குவதற்காக வலுவான வாதங்களை வைத்து வாதாடியதும் போட்டிகள் நடத்தலாம் என்று அனுமதியைப் பெற்றதும் கழக ஆட்சியில்தான்.

ஆட்சி மாறியதும், 2014ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்த முடியாத சூழல் வந்தது. நம்முடைய இளைஞர்கள் சேர்ந்து, 'மெரினா தமிழர் புரட்சி' என்று சொல்கின்ற அளவிற்கு 2017இல் மிகப்பெரிய மக்கள் போராட்டம் சென்னைக் கடற்கரையில் நடந்தது.

அமைதி வழியில் போராடியவர்கள் மேல் வன்முறையை ஏவி கூட்டத்தைக் கலைத்தது அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. ஆட்சி. அவர்களே ஆட்டோக்களுக்கு தீ வைத்துக் கொளுத்தி, அந்தக் கொடுமையான காட்சியெல்லாம் அப்போது வெளியானது!

தமிழ்நாடு முழுவதும் நடந்த போராட்டங்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சி அடிபணிந்தது. அதன் பிறகுதான் மீண்டும் ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்துகிற நிலை உருவானது. ஆனாலும், நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அனுமதி தருகிறோம் என்ற பெயரில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடகம் ஆடியது. ஆனாலும், மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டுதான் இருந்தது. அந்த வழக்கில், ஒன்றிய அரசு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் என்ன சொன்னது தெரியுமா?

"ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டி பந்தயப் போட்டிகளை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. மாட்டுவண்டி பந்தயம், ஜல்லிக்கட்டுப் போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை. கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்கும், கேலோ இந்தியா உள்ளிட்ட எந்தத் திட்டத்தின் கீழும் ஜல்லிக்கட்டு இல்லை" என்று தெரிவித்தார்கள் ஒன்றிய அரசுத் தரப்பில்.

நமது திராவிட மாடல் அரசு நீதிமன்றத்தில் என்ன சொன்னது?

"ஜல்லிக்கட்டு வெறும் பொழுதுபோக்கு போட்டி இல்லை. அது உழவர்களின் வாழ்வோடும், பண்பாட்டோடும் கலந்தது. போட்டிகளைப் பாதுகாப்பாக நடத்துகிறோம். காளைகளை நமது குடும்பங்கள் கவனத்தோடு வளர்க்கிறோம்" என்று அழுத்தம் திருத்தமாக வாதங்களை வைத்தோம். திராவிட மாடல் அரசின் தீவிர முயற்சியால், ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்தலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் கடந்த ஆண்டு மே மாதம் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் பெற்றோம்.

இவ்வளவு தடைகளையும் தி.மு.க. அரசு உடைத்து எறிந்ததால்தான் இன்றைக்கு ஏறுதழுவுதல் போட்டி கம்பீரமாக நடக்கிறது. இந்தச் சாதனை வரலாற்றின் தொடர்ச்சியாக இந்தக் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில், காளைகள், ஏறுதழுவுதல் பற்றிய அருங்காட்சியகமும், நூலகமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

பல நூற்றாண்டிற்கு முந்தைய நூல்களும், ஓவியங்களும், புகைப்படங்களும் இங்கே இருக்கிறது. இதனை உருவாக்கித்தந்த தமிழ் இணையக் கல்விக் கழகத்துக்கு நன்றி!

அன்னைத் தமிழ் நிலத்துக்குப் பேரறிஞர் அண்ணா "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டினார். தமிழுக்குச் 'செம்மொழி' தகுதி பெற்றுத் தந்தார் தலைவர் கலைஞர். இன்றைக்குத் தமிழர் பண்பாட்டு அடையாளமான ஏறுதழுவுதலுக்கு, நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அரங்கம் அமைத்திருக்கிறோம்! இந்தத் தருணத்தில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது, "சாதிப் பிளவுகளும், மத வேறுபாடுகளும், தமிழர் ஒற்றுமையைச் சிதைக்க பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவை என்பதை உணர்ந்து, தமிழர் என்ற நமது அடையாளத்தோடு இதுபோன்ற பண்பாட்டுத் திருவிழாக்களை ஒற்றுமையாக நடத்துவோம்!"

இந்த அரங்கில், காளைகள் வீரமாக களம் இறங்கட்டும்! காளையர்கள் தீரமாகக் காளைகளைத் தழுவட்டும்! தமிழர்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு கண்டுகளிப்போம்!

தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! வீர விளையாட்டான ஏறுதழுவுதல் வெல்க!

“அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில் அயலகத் தமிழர்களுக்கான ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித்திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 12.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.01.2024 அன்று, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் ‘தமிழ் வெல்லும்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில் கலந்து கொண்டு தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாகச் செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி, ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

அயலகத் தமிழர் தினம் 2024 விழா

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை 3ஆவது ஆண்டாக தொடர்ந்து அயலகத் தமிழர் தின விழாவை நடத்தி வருகிறது. இந்த விழாவில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர் பெருமக்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அயல்நாடுகளில் வசிக்கும் 1,400க்கும் மேற்பட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்க பதிவு செய்துள்ளனர். இதில், 218 சர்வதேச தமிழ்ச் சங்கங்கள், 48 பிற மாநில தமிழ்ச் சங்கங்களைச் சேர்ந்த அயலகத் தமிழர்கள் பங்கேற்றனர்.

அயலகத் தமிழர் தின விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள்

முன்னதாக, முதல் நாளான 11.01.2024 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் தின விழாவைத் தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட அயலகத் தமிழர்க் கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்தார். இதில், சிறப்பு நேர்வாகக் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

'வேர்களைத் தேடி' திட்டத்தின் கீழ் அயலகத் தமிழ் மாணவர்கள் அனுபவங்களைப் பகிர்தல்

இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக, 'வேர்களை தேடி' திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 57 அயலகத் தமிழ் மாணவர்கள் தங்களது பண்பாட்டுச் சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்தனர்.

முதல் நாள் விழாவில், சிறப்பு நிகழ்ச்சிகளாக நான்கு கலந்துரையாடல்கள், ஒரு கவிஅரங்கமும், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம. இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் தமிழின் தொன்மை – தொடர்ச்சி குறித்துத் துறைசார் வல்லுநர்கள் கருத்துக்களைப் பகிர்ந்தனர். தொடர்ந்து, கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் சிந்து சமவெளி முதல் செயற்கை நுண்ணறிவு வரை – தொலைநோக்குச் சிந்தனையும் செயலும் என்ற தலைப்பில் கவியரங்கமும் நடைபெற்றது.

மேலும், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தலைமையில் ஒளிரும் எதிர்காலம் – வாய்ப்புகளும் சவால்களும் என்ற தலைப்பிலும், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தலைமையில் வணிகத்தில் தமிழர்கள் – வாய்ப்பும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தல்

இரண்டாம் நாளான 12.01.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ்த் தமிழ்நாட்டில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத்தின் வாயிலாகச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. கா. சண்முகம் அவர்கள் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகள் வழங்குதல்

இவ்விழாவில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாகச் செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கு விருதுகள் வழங்கும் விதமாக, அறிவியல், தொழில்நுட்பப் பிரிவில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் சுதாகர் பிச்சைமுத்து அவர்களுக்கும், தமிழ் இலக்கியப் பிரிவில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் தின்னப்பன், அமெரிக்க நாட்டின் திருமதி வைதேகி ஹர்பேர்ட், மருத்துவப் பிரிவில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த திரு. ஜெயராம் லிங்கமாணிக்கர், கல்விப் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த திரு. பால சுவாமிநாதன், ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த திரு. முருகேசு பரமநாதன், சமூக மேம்பாட்டுப் பிரிவில் மலேசியா நாட்டைச் சேர்ந்த திரு. டத்தோ எம். சரவணன், மகளிர் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த திருமதி சித்ரா மகேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி ஜெசிலா பானு, விளையாட்டுப் பிரிவில் தென் கொரியா நாட்டைச் சேர்ந்த திரு. ராமன் குருசாமி, குவைத் நாட்டைச் சேர்ந்த திருமதி சரண்யா தேவி, வணிகப் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த திரு. பக்கிரிசாமி ராஜமாணிக்கம், மலேசியா நாட்டைச் சேர்ந்த திரு. சையது முகமது சலாவுதீன் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதிற்கான தங்கப் பதக்கம், பாராட்டுப் பட்டயம் வழங்கிச் சிறப்பித்தார்.

அயலகத் தமிழர் தின விழாவில் இடம்பெற்ற கண்காட்சி அரங்குகள்

அயலகத் தமிழர் தின விழாவில், தமிழர் நலன், தமிழர் கலைப் பண்பாடு, வணிகம், தமிழின்

தொன்மை, தொடர்ச்சி, சர்வதேசத் தமிழ்ச் சங்கம் என்ற கருப்பொருள் வாரியாக கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுத் தமிழர் மரபு, பண்பாடுகள் குறித்து விளக்கப்பட்டன.

இதில், தமிழர் நலனை விளக்கும் விதமாக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் அரங்குகளும், தமிழர் கலை, பண்பாடு, வணிகத்தை விளக்கும் அரங்குகளும், தமிழின் தொன்மை, தொடர்ச்சி குறித்துத் தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் தொல்லியல் துறை, தமிழ் இணையக் கல்விக் கழகம் ஆகியவற்றின் சார்பில் அரங்குகளும், இலங்கைத் தமிழ் கலை கண்காட்சி அரங்குகளும், சர்வதேச தமிழ் சங்கங்களால் அமைக்கப்பட்ட அரங்குகளும், தமிழர் மரபு, பண்பாடுகளை விளக்கும் வகையில் இடம்பெற்றன.

இவற்றுடன் தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செயல்படுத்தும் "நான் முதல்வன் திட்டம்", சிப்காட், வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau), டிட்கோ, சிட்கோ உள்ளிட்ட துறைகளின் காட்சி அரங்குகளும் இடம்பெற்றன. சுற்றுலா வளர்ச்சித் துறை, பூம்புகார், தமிழ் வளர்ச்சித் துறை, கோ-ஆப்டெக்ஸ், அயலக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாடுகளை விளக்கும் காட்சி அரங்குகளும் இடம்பெற்றன. மேலும், வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்வதற்கான வசதி வாய்ப்புகள் குறித்து விளக்கிட ஸ்டார்ட் அப் டிஎன், ஃபேம் ஆகியவற்றின் கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

எனக்கு உடல் நலமில்லை... உற்சாகமாக இல்லை... என்று நேற்று ஒரு பத்திரிகையில் எழுதி இருந்தார்கள். அதைப் படித்தபோது எனக்கு சிரிப்புதான் வந்தது. எனக்கு என்ன குறை?

தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றபோது, அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்? நேற்று ஒரு காணொலியைப் பார்த்தேன். சென்னையைச் சேர்ந்த ஒரு சகோதரி பேசுகிறார்கள்.. "கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. அரிசி, சர்க்கரை, கரும்பு வந்துவிட்டது... வெள்ள நிவாரணமாக ஆறாயிரம் ரூபாய் கிடைத்து விட்டது. ஒரு மாதத்தில் முதலமைச்சரே எட்டாயிரம் ரூபாய் கொடுத்து விட்டார். பொங்கலுக்கு, யாரையும் நான் எதிர்பார்க்கத் தேவையில்லை என்று பேட்டிக் கொடுத்திருக்கிறார் அந்த சகோதரி. அவர் முகத்தில் பார்க்கின்ற மகிழ்ச்சிதான் எனக்கான உற்சாக மருந்து!

எனக்கு மக்களைப் பற்றிதான் எப்போதும் நினைப்பே தவிர, என்னைப் பற்றி இருந்தது இல்லை. எந்தச் சூழலிலும், மக்களோடு இருப்பவன் நான். என் சக்தியை மீறியும் உழைப்பவன் நான். இதுமாதிரியான செய்திகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, உழைத்துக் கொண்டே இருப்பேன்!

அண்மையில், இதே அரங்கத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாடு என்பது, தமிழ்நாட்டை வளப்படுத்த உலகமே திரண்ட மாநாடு என்று சொன்னால், இன்று நடைபெறுவது உலகத்தை வளப்படுத்த சென்ற தமிழர்களைக் கொண்டாடும் மாநாடு!

இந்த மாநாட்டுக்குக் கிடைத்த மாபெரும் சிறப்புகளில் ஒன்று சிங்கப்பூர் உள்துறை, சட்ட அமைச்சர் மாண்புமிகு சண்முகம் அவர்கள் இங்கு வருகை தந்திருப்பது! அவர், உலகப் புகழ்பெற்ற தமிழன் மட்டுமல்ல, உலகமே கவனிக்கின்ற பதவியில் இருக்கும் தமிழன்!

நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோது நான் தங்கிய இடத்திற்கே வந்து, எனக்குச் சிறப்புச் செய்தார். நேற்று அவரை என்னுடைய வீட்டிற்கே வரவழைத்து மகிழ்ந்தேன். அவரை இன்றும், என்றும் வாழ்த்தி வரவேற்கிறேன். அவரைப்

போலவே, இந்த மேடையில், உலகமெங்கும் பல நாடுகளில் இருக்கக்கூடிய பல்வேறு பொறுப்புகளில், அறிவால், ஆற்றலால் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதற்குச் சாட்சியாக அமர்ந்திருக்கும் அனைவரையும் நான் உள்ளபடியே வரவேற்கிறேன். வாழ்த்துகிறேன்.

அனைவரது வருகைக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். மேடையிலும், நேரிலும் அமர்ந்திருக்கும், உங்களை எல்லாம் பார்க்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது. "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற உழைப்புத் திறன்தான் கடல் கடந்தும் தமிழர்கள் வெற்றிகரமாக வாழக் காரணம்! இப்படிப் புலம்பெயர்ந்த நம் தமிழ்ச் சொந்தங்கள், அந்த நாடுகளுடைய வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் முதுகெலும்பாக இருந்து வருகிறார்கள்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் 2010ஆம் ஆண்டு வெளிநாடுவாழ் தமிழர்களுடைய துயரங்கள் களைய "வெளிநாடுவாழ் தமிழர் நலப்பிரிவு" உருவாக்கி அரசாணை வெளியிடப்பட்டதோடு, வாரியம் அமைக்கவும் சட்டமுன்வடிவு உருவாக்கப்பட்டது. ஆனால், தொடர்ந்து வந்த ஆட்சி மாற்றம் காரணமாக, இந்த முயற்சிகளில் தடை ஏற்பட்டது. ஆனால், இப்போது அமைந்திருக்கின்ற நம்முடைய திராவிட மாடல் அரசு தேர்தல் அறிக்கையில் சொன்னபடியே, அயலகத் தமிழர் நலனுக்கென்று தனியாக ஒரு துறையை உருவாக்கி, தனி அமைச்சரையும் நியமித்து, உங்களுடைய அவசரத் தேவைகள் உடனுக்குடன் சிறப்பான முறையில் தீர்த்து வைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு தலைவர், 14 உறுப்பினர்களைக் கொண்ட அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையும், வாரியமும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறார்கள்.

வெளிநாடுகளில் நிரந்தரக் குடியுரிமை உள்ள தமிழர்களுடைய குழந்தைகளுக்குத் தமிழ்மீது ஆர்வத்தை உருவாக்கி, தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாகத் தமிழ் கற்றுத் தரப்படுகிறது. வெளிநாடுகளில், கைது செய்யப்படுகின்ற சூழலுக்கு ஆளாகின்ற தமிழர்களுக்கு உரிய சட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அயல்நாடுகளில் உதவி தேவைப்படுகின்ற தமிழர்களுக்கு ஒன்றிய அரசின் வெளியுறவு அமைச்சகம், அது தொடர்புடைய இந்தியத் தூதரகத்துடன் இணைந்து உரிய நிவாரண நடவடிக்கைகளை இந்தத் துறை சிறப்பாகச் செய்து வருகிறது.

மருத்துவ இயலாமை, பல்வேறு காரணங்களால் தாயகம் திரும்ப முடியாமல் கஷ்டப்படுகின்ற தமிழர்களைத் தாய்நாட்டிற்கு அழைத்துக்கொண்டு வரவும், அங்கு இறக்க நேரிடும் தமிழர்களின் உடல்களை இந்தியா கொண்டு வரவும், தமிழ்நாடு அரசால் ஒரு கோடி ரூபாய் சுழல்நிதி ஏற்படுத்தப்பட்டு, தமிழர்களுடைய துயரங்களைத் துடைக்கின்ற பணி உரிய முறையில் செய்யப்பட்டு வருகிறது.

முகவர் மீதான புகார், நில அபகரிப்புப் புகார் தொடர்பான 53 இனங்களில் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பான புலம் பெயர்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி, தொழிற்கல்வி நிலையங்களில், விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அயல்நாட்டில் வசிக்கின்ற நம்முடைய தமிழர்கள், இங்கு இருக்கின்ற அவர்களுடைய குடும்பத்தினர் எதிர்கொள்ளுகின்ற நிலம், பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளைக் களைய, டி.ஜி.பி. அலுவலகத்தில் தனிப்பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

அயல்நாடுகளுக்குச் செல்கின்ற தமிழர்களுக்கு, அந்த நாடுகளின் சட்டம், பண்பாடு, மொழி தொடர்பான குறைந்தபட்சப் புரிதலை உருவாக்க, சென்னையில், முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம் செயல்பட்டு வந்தது. இப்போது, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, பெரம்பலூர், விழுப்புரம் மாவட்டங்களிலும் இம்மையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

உக்ரைன், சூடான், கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் என்று பல்வேறு நாடுகளில் இருக்கின்ற நம்முடைய தமிழர்கள் அங்கு எதிர்பாராத விதமாக பிரச்சினைகளைச் சந்திக்கின்றபோது, தமிழ்நாடு அரசு விரைவாகச் செயல்பட்டுப் பத்திரமாக அழைத்துக்கொண்டு வந்திருக்கிறது.

அயல்நாடுகள் மட்டுமில்லாமல், மணிப்பூர் கலவரம், அமர்நாத் பனிச்சரிவு போன்ற இந்தியாவின் பிற மாநிலங்களில் ஏற்படுகின்ற இயற்கை இடர்ப்பாடு, அசாதாரண சூழ்நிலைகளிலும் தமிழர்களைப் பாதுகாப்பாக மீட்பதில், கண்ணும் கருத்துமாக நாங்கள்

செயல்பட்டதை நீங்களே பார்த்தீர்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த "எனது கிராமம்" திட்டம் துவங்கப்பட்டிருக்கிறது.

வெளிநாடு வாழ் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய சேமிப்பைத் தமிழ்நாட்டில் பாதுகாப்பாக முதலீடு செய்ய ஆர்வத்துடன் இருக்கிறார்கள். இதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி இவர்கள் முதலீடுகள் அரசு, தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்ய ஏதுவான சூழலையும் உருவாக்கி இருக்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் அயலகத் தமிழர் நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுக் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சிறப்பாகத் தொடர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

கடந்த இரண்டு நாட்களாக, உலகத் தமிழினத்தின் மாநாடு போல சீரும் சிறப்புமாக இது நடந்துகொண்டு வருகிறது. "வேர்களைத் தேடி" என்பது இந்த ஆண்டுக்கான முத்தாய்ப்பான திட்டமாக அமைந்திருக்கிறது. ஆண்டுதோறும் 200 இளைஞர்கள் தேர்ந்தெடுத்துப் பண்பாட்டுச் சுற்றுலா அழைத்துக்கொண்டு செல்வதற்கு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 58 இளைஞர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்துக்கொண்டுவந்து, டிசம்பர் 27ஆம் தேதி முதல் ஜனவரி 10ஆம் தேதி வரை 15 நாட்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கலை, இலக்கியம், பண்பாடு, பழம்பெரும் கட்டடம், வணிகம், விடுதலைப் போராட்டத்தில் நம்முடைய பங்கேற்பு, ஆடைகள் தயாரித்தல், அணிகலன் செய்தல் என்று தமிழர்களின் அனைத்து மாண்புகளையும் பார்த்துக்கொண்டு வந்து, அவர்களுடைய அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொண்டார்கள். இதில் இந்தத் திட்டத்தின் வெற்றியை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

இந்த ஆண்டின் அயலகத் தமிழர் நாள் கொண்டாட்டம் "தமிழ் வெல்லும்" என்ற சிறப்பான கருப்பொருளைக்கொண்டு, மிக எழுச்சியோடும், 50க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் இருந்து வந்திருக்கின்ற உங்கள் எல்லோருடைய பங்கேற்போடும் மிகச் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது.

தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமில்லாமல், ஒரு தமிழனாகவும் இதைப் பார்த்து நான் அகம் மகிழ்கிறேன். நீராலும், நிலத்தாலும் ஏன் நாடுகளாலும், கண்டங்களாலும் பிரிந்து இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்!

தமிழ் அன்னையின் குழந்தைகள்! அந்த உரிமையுடன் உங்கள் சகோதரனாக நான் உங்களிடம் வைக்கின்ற வேண்டுகோள்... எங்கு வாழ்ந்தாலும் தாய்த்தமிழ் நாட்டை மறக்காதீர்கள்! அடிக்கடி உங்கள் குழந்தைகளோடு தமிழ்நாட்டிற்கு வாருங்கள்! கீழடி, பொருநை, ஆதிச்சநல்லூரைக் காட்டுங்கள்! தமிழோடு இணைந்திருங்கள்! நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், நமது திராவிட மாடல் அரசுக்கும் துணையாக இருந்திடுங்கள்! என்று கேட்டு, அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு!

நன்றி! வணக்கம்!

பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 13.01.2024 அன்று, சென்னை, தீவுத்திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில், சென்னை மாநகரில், பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா"-வைத் தொடங்கி வைத்து, கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார்.

சென்னை மாநகரில், தீவுத்திடல், கொளத்தூர் – மாநகராட்சி விளையாட்டு மைதானம், பெரம்பூர் - முரசொலிமாறன் மேம்பாலப் பூங்கா, இராயபுரம் – ராபின்சன் விளையாட்டு மைதானம், மயிலாப்பூர் – நாகஸ்வரராவ் பூங்கா, செம்மொழிப் பூங்கா, நுங்கம்பாக்கம் – மாநகராட்சி விளையாட்டுத் திடல், திருவல்லிக்கேணி – பாரத சாரண சாரணியர் திடல், தி.நகர் - நடேசன் பூங்கா எதிரிலுள்ள மாநகராட்சி மைதானம், பெசன்ட் நகர் – எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, சைதாப்பேட்டை – மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானம், கே.கே. நகர் – சிவன் பூங்கா, வளசரவாக்கம் – பழனியப்பா நகர், லேமேக்ஸ் பள்ளி வளாகம், அண்ணா நகர் – கோபுரப் பூங்கா, கோயம்பேடு – ஜெய்நகர் பூங்கா, அம்பத்தூர் – எஸ்.வி. விளையாட்டு மைதானம், எழும்பூர் – அரசு அருட்காட்சியகம் ஆகிய 18 இடங்களில் சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா 14.01.2024 முதல் 17.01.2024 வரை மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை நடைபெற்றது.

சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழாவில், செவ்வியல் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், கானா பாட்டு, ராப் இசை, இருளர் பாட்டு, காணிக்காரன் பாட்டு, நையாண்டி மேளம், கரகாட்டம், பறையாட்டம், புரவி, காளை, மயிலாட்டம், பம்பையாட்டம், படுகர் நடனம், துடும்பு, மகுடம், சிலம்பாட்டம், கொம்பு, தாரை, ஆலியாட்டம், சேவையாட்டம், கும்மியாட்டம், ஜிக்காட்டம் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

2023ஆம் ஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கி சிறப்பித்தார் - 13.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் தமிழ் மொழிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த 7 தமிழறிஞர்களுக்கு அய்யன் திருவள்ளுவர் விருது, தமிழ்நாடு அரசின் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். மேலும், சமூக நீதிக்கான "தந்தை பெரியார் விருதினை திரு. சுப.வீரபாண்டியன் அவர்களுக்கும், டாக்டர் அம்பேத்கர் விருதினை திரு. பி.சண்முகம் அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தைத்திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் திருநாள் என கடைப்பிடிக்க ஆணையிட்டார். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் வள்ளுவர்கோட்டம் உருவாக்கப்பட்டதோடு, கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெரு முயற்சியால் தொன்மையும், இலக்கிய வளமும் நிறைந்த தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசும், தமிழறிஞர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் சிறப்பிக்கும் விதமாக, மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது, தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில், "இலக்கிய மாமணி விருது" என்ற புதிய விருது தோற்றுவிப்பு, ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள் பெற்ற எழுத்தாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாகக் கனவு இல்லம் வழங்கும் திட்டம், தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில், தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் 2024ஆம் ஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருது தவத்திரு பாலமுருகனடிமை சுவாமி அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது பத்தமடை திரு. பரமசிவம் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது

திரு. உ.பலராமன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பழநிபாரதி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது எழுச்சிக் கவிஞர் ம.முத்தரசு அவர்களுக்கும், தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது பேராசிரியர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது முனைவர் இரா.கருணாநிதி அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி, சிறப்பித்தார். இவ்விருதுகளைப் பெறும் விருதாளர்களுக்கு விருதுத் தொகையாகத் தலா இரண்டு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்துச் சிறப்பு செய்யப்பட்டது.

மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவரும், தந்தை பெரியாரின் பற்றாளருமான தமிழ்நாடு அரசின் சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் திரு. சுப.வீரபாண்டியன் அவர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருது 32 ஆண்டுகாலமாக மலைவாழ் மக்கள் சங்கத்தின் தலைவராகப் பணிவகித்து மலைவாழ் மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வரும் திரு. பி.சண்முகம் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். இவ்விருதுடன் விருதாளர்களுக்கு விருதுத் தொகையாகத் தலா ரூ.5 இலட்சம், தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கி, பொன்னாடை அணிவித்துச் சிறப்பு செய்யப்பட்டது.

மொழிப்போர் தியாகிகள் தினம்

படமும் / செய்தியும்

மொழிப்போர் தியாகிகள் தினத்தையொட்டி, 25.01.2024 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில், தமிழ் மொழி காக்க இன்னுயிர் நீத்த தியாகிகளை நினைவுகூறும் வகையில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் எல்.சுப்பிரமணியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சாலைப் பாதுகாப்பு... நம் உயிர் பாதுகாப்பு...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வெளியிட்ட சாலைப் பாதுகாப்பு மாதம் - வாழ்த்துச் செய்தி – 14.01.2024

சாலை விபத்துகளால் ஏற்படும் கொடுங்காயங்கள், இறப்புகளைத் தடுக்கும் பொருட்டு, சாலைகளில் பொதுமக்களின் பாதுகாப்பு மிகமிக அவசியமானதாகிறது. சாலையை உபயோகிக்கும் பாதசாரிகள், வாகன ஓட்டுநர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, சாலைப் பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைபிடிப்பது நம் அனைவரின் கடமையாகும்.

நமது நாட்டில், சாலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு, இந்த ஆண்டு சனவரி 15 முதல் பிப்ரவரி 14 வரை "தேசியச் சாலைப் பாதுகாப்பு மாதம்" அனுசரிக்கப்படுகிறது. சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் விபத்தில்லாப் பயணத்தை உறுதி செய்வது தேசிய சாலைப் பாதுகாப்பு மாத விழாவின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசின் "விபத்தில்லாத் தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 2023-2024ஆம் ஆண்டிற்கு, சாலைப் பாதுகாப்பிற்காக அரசு ரூ.135.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியானது, குழந்தைகள், இளைஞர்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் (Accident Hot Spots) கண்டறிந்து மேம்படுத்தவும், நவீனச் சமிக்ஞை விளக்குகள், சாலைக் கட்டமைப்புகள், சாலைத் தடுப்பான்களை நிறுவுவதற்காகவும் செலவிடப்பட்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றத் தவறுவதால் வாகன விபத்துகள் ஏற்படுகின்றன. தனி மனித நடத்தை, ஓட்டுநரின் உளவியல் நிலை, பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை, சாலையின் அமைப்பு, சுற்றுப்புறச்சூழல் போன்றவைகளே சாலை விபத்துகளுக்கான முக்கிய காரணிகள் என பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மேலும், தற்போதைய, வருங்கால சாலை உபயோகிப்பவர்களிடையே பாதுகாப்பானச் சாலைப் பயனாளர் நடத்தையை ஊக்குவிப்பதற்காக சாலைப் பயனாளர்களுக்குச் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை வழங்குவது அரசின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "இன்னுயிர் காப்போம்: நம்மைக் காக்கும் 48" என்ற சீர்மிகு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்றவகையில், சாலை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு விரைந்து சிகிச்சை அளிக்கும்பொருட்டு, மாநில. தேசிய நெடுஞ்சாலைகளில் உடனடி விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. சாலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வினைப் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் அனைத்து அரசு, அரசு சாரா பள்ளிகளில் உருவாக்கப்பட்டுச் செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்தச் சாலைப் பாதுகாப்பு மாதத்தில், அரசானது வாகனத்தை இயக்கிவரும் ஓட்டுநர்களுக்குச் சாலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதசாரிகள் சாலையைக் கடப்பதற்கு நடைமேம்பாலங்கள், சுரங்க நடைபாதைகள் ஆகியவைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு முழுவதும் நடத்த திட்டமிட்டுள்ளது.

உயிர் வாழ்வதற்கான மற்ற அடிப்படைத் திறன்களைப் போல சாலைப் பாதுகாப்புக் கல்வியும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, சாலை விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்து விபத்தில்லாத் தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய நாம் அனைவரும் பொறுப்புடன் செயல்படுவோம்.

சாலை விதிகளை மதித்தால், விபத்தில்லாப் பயணம் சாத்தியமே !!

விதிகளை மதிப்போம்! வேதனைகளைத் தவிர்ப்போம் !!

சாலைப் பாதுகாப்பு, நம் உயிர்ப் பாதுகாப்பு!

சேலம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் செவி மாற்றுத்திறன் மாணவர்களுக்கான விடுதியுடன் கூடிய அரசு உயர்நிலைப்பள்ளி புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செவி மாற்றுத்திறன் மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காகச் சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் ரூ.6.70 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கான புதிய கட்டடத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக் காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன் முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காகத் தனி துறையை உருவாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையுடன் அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் "மாற்றுத்திறனாளிகள்" என்ற சொல்லையும் அறிமுகப்படுத்தினார். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதிகம் கவனம் செலுத்தி வருவதோடு, மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ பல்வேறு திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார்–18.01.2024

மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் சேலம் மாவட்டம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ள செவி மாற்றுத்திறன் மாணவர்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளி கட்டடம், 1.31 ஏக்கர் நிலப்பரப்பில், 23,695 சதுர அடியில், ரூ.6.70 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில், 15 வகுப்பறைகள், கலையரங்கம், 50 மாணவர்கள், 50 மாணவிகள் தங்கிப்பயிலும் வகையில் விடுதிகள், கணினி அறை, ஸ்மார்ட் வகுப்பு அறை, நூலக அறை, உணவருந்தும் அறை, சமையலறை, சுற்றுச்சுவர் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த கழிவறைகள் ஆகிய சிறப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர் தடையற்ற சூழலுடன் கல்வி பயில்வதற்கு ஏதுவாக, அனைத்து அறைகளிலும் ஒளிரும் விளக்குகள் (Blinking Lights), வழிகாட்டிப் பலகைகள் (Signage Board) பொருத்தப்பட்டுள்ளன.

ரூ.100 கோடி மதிப்பீட்டில்
ஓசூர் மருத்துவமனை
மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார் - 18.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஓசூர் மருத்துவமனையை, மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி ரூ.100 கோடி மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிக்கு காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். மேலும், இந்திய மருத்துவம், ஓமியோபதி துறையில் சிகிச்சை உதவியாளர் பணியிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினைச் செயல்படுத்தும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம்" சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில் "இன்னுயிர்க் காப்போம் - நம்மைக் காக்கும்-48", சுகாதார நடைபாதைத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

ஓசூர் மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் கட்டுமானப் பணிக்கு காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டுதல்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் இல்லாத மாவட்டங்களில் மக்கள் பயன்பெறும் வகையில் உயர்தர மருத்துவச் சேவைகளை

வழங்கிட புதிய மாவட்டத் தலைமை மருத்துவமனை அமைத்தல், மருத்துவமனைகளை மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் ஜெயங்கொண்டான், தாம்பரம், பழனி, திருக்கோவிலூர், கரூர், ஓசூர், மயிலாடுதுறை, வேதாரண்யம், ராசிபுரம், அறந்தாங்கி, பரமக்குடி, கூடலூர், திருத்தணி, வள்ளியூர், திருப்பத்தூர், காங்கேயம், குடியாத்தம், திண்டிவனம், அருப்புக்கோட்டை ஆகிய 19 அரசு மருத்துவமனைகள் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள அரசு மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி ரூ.100 கோடி மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

புதிய தொழிற்சாலைகள், விரிவடைந்து வரும் தகவல் தொழில்நுட்பத்துறைக் காரணமாக ஓசூர் மாநகராட்சி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்து வருகிறது. ஆகையால் பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப ஒரு வலுவான சுகாதார உட்கட்டமைப்பை ஏற்படுத்துவது அவசியமான ஒன்றாகும். எனவே, ஓசூரில் உள்ள அரசு மருத்துவமனையை, மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, விரிவான சிறப்பு மருத்துவச் சேவைகளை வழங்கும் வகையில், 22,395 சதுர மீட்டர் பரப்பளவில் தரை, ஆறு தளங்களுடன் 419 படுக்கைகள் கொண்ட மாவட்டத் தலைமை மருத்துவமனை ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது.

இம்மருத்துவமனையில், அதிநவீன வசதிகளுடன் கூடிய புறநோயாளிகள் பிரிவு, தீவிரச் சிகிச்சைப் பிரிவுகள், உயர் சார்பு பிரிவுகள், அறுவைச் சிகிச்சை அரங்கு வளாகங்கள், அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும் நோயாளிகளுக்கான பிரத்யேக அறைகள், ஆண், பெண் உள்நோயாளி பிரிவுகள், வலி, நோய்த்தடுப்புச் சிகிச்சைப் பிரிவுகள், முதியோர்களுக்கான சிறப்புப் பிரிவுகள், கட்டணப் பிரிவுகள் ஆகிய பிரிவுகளும், அவசரகால, விபத்து மேலாண்மை சிகிச்சைப் பிரிவு (TAEI), இரத்தச் சுத்திகரிப்புச் சேவைகள், ART மையம், மத்திய மருந்துக் கடைகள், காசநோய்ச் சிகிச்சைக்கான சேவைகள், மருத்துவக் கழிவு மேலாண்மை, நோயாளிகள் பதிவு அறைகள் போன்ற கூடுதல் வசதிகளும் வழங்கப்படும்.

"108" அவசரகால ஊர்திகளின் சேவைகளை மேம்படுத்தும் வகையில் 75 புதிய ஊர்திகள், 98 நவீனச் செயற்கைச் சுவாசக் கருவிகளைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வழங்குதல்

'108' அவசரகால ஊர்திச் சேவையானது 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. '108' அவசரகாலச் சேவையானது அரசுத் தனியார் பங்களிப்பு திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு, 24x7 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அவசரகால மருத்துவத் தேவைக்குத் தொலைபேசி எண்ணான "108"–ஐ தொடர்பு கொண்டு பயன்பெறுகின்றனர்.

அவசரகால நெருக்கடியின்போது தேவையான மருத்துவ உதவியை இலகுவாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் அனைவரும் பெற்று பயன்பெறும் வகையில், தற்போது 1,353 எண்ணிக்கையிலான '108' அவசரக் கால ஊர்திகள் செயல்பாட்டில் உள்ளன. '108' சேவை மூலம் இதுவரை 1.61 கோடிப் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

2023-2024ஆம் ஆண்டிற்கான மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையில், 108 அவசரகால ஊர்திகளின் சேவையை வலுப்படுத்த 62 புதிய அவசரகால ஊர்திகள், 13 தாய் சேய் நல ஊர்திகள், 98 நவீன வென்டிலேட்டர் கருவிகள் ஆகியவை கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, "108" அவசரகால ஊர்திகளின் சேவைகளை மேம்படுத்த, அடிப்படை வசதி கொண்ட 55 புதிய அவசரக் கால ஊர்திகள், பழங்குடியினர்கள் பயன்பாட்டிற்காக மலைப் பகுதிகளில் செல்லத்தக்க வகையில் 7 புதிய நான்கு சக்கர அவசரக் கால ஊர்திகள், தாய்ச் சேய் நல ஊர்தி (JSSK) திட்டத்தின்கீழ் 13 புதிய ஊர்திகள், என மொத்தம் 14 கோடியே 73 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 75 புதிய ஊர்திகளைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊர்தி ஓட்டுநர்களிடம் அவ்வாகனங்களுக்கான திறவுகளை வழங்கினார்.

மேலும், மேம்படுத்தப்பட்ட அவசரக்கால ஊர்திகளில் பொருத்திடும் வகையில் ரூ.6.53 கோடி மதிப்பிலான 98 நவீனச் செயற்கை

சுவாசக் கருவிகளைப் (Transport Ventilator) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இயற்கைப் பேரிடர் காலங்களில் சிறப்பாகப் பணியாற்றிய அவசரக்கால ஊர்தி பணியாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்குதல்

மிக்ஜாம் புயல், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பெய்த அதி கனமழையின் போது சிறப்பாகப் பணியாற்றிய "108" அவசரகால ஊர்திப் பணியாளர்கள் திரு.எஸ்.மோகன், திரு.எஸ்.ராஜா, திரு.என்.அரவிந்த்குமார், திரு.கே.சந்தனமாரியப்பன் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையில் சிகிச்சை உதவியாளர் பணியிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்குதல்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின்கீழ் இயங்கும் யோகா, இயற்கை மருத்துவ நிலையங்களில் காலியாக உள்ள 59 சிகிச்சை உதவியாளர் பணியிடங்களுக்கு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சிறந்த செயல்பாட்டிற்காகத் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்குத் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ், கேடயம் காண்பித்து வாழ்த்துப் பெறுதல்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றின் நிலையைக் கண்டறிய அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பரிசோதனை மையங்கள், பால்வினைத் தொற்றுச் சிகிச்சை மையங்கள், கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் வாயிலாகக் கட்டணமில்லா மருத்துவச் சேவைகளை வழங்கி வருகிறது. இதன் பயனாகத் தமிழ்நாட்டில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் தாக்கம் குறைந்துள்ளது.

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் 2023 டிசம்பர் மாதம் புதுதில்லியில் நடைபெற்ற அனைத்துத் திட்ட இயக்குநர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அனைத்துத் திட்டப் பிரிவுகளிலும் சிறப்பாக செயல்பட்டதற்காக, சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாகத் (Best Performing State) தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு 2022-2023ஆம் ஆண்டிற்கான பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு வழங்கப்பட்ட கேடயம், சான்றிதழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

தமிழ்நாட்டின் புகழ் மகுடத்தில் மற்றுமொரு மாணிக்க முத்திரை

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்- 2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் - 2023-ஐ, சென்னையில் நடத்திட முடிவு மேற்கொண்டதைத் தொடர்ந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசின் உயர் அலுவலர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் அனைவருடனும் இணைந்து இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்கள்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைச் சென்னைக்கு வருகை தந்து கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்துச் சிறப்பிக்குமாறு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 04.01.2024 அன்று புதுடெல்லி சென்று அழைப்பு விடுத்தார்கள்.

இந்த அழைப்பினை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 19.01.2024 அன்று சென்னைக்கு வருகை தந்து மாலை 6.00 மணிக்கு ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

ஒன்றிய அரசின் மாண்புமிகு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுகள், செய்தி மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர், ஒன்றிய அரசின் மாண்புமிகு உள் விவகாரங்கள், இளைஞர் விவகாரங்கள், விளையாட்டுத் துறை இணையமைச்சர் திரு. நிசித் பிரமாணிக், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றார்கள்.

23.01.2024 அன்று தொடங்கி 31.01.2024 வரை நடைபெற்றன. இந்த விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் மட்டுமல்லாமல் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகியநகரங்களிலும் நடைபெற்றன.

தடகள விளையாட்டுகளான கால்பந்து, கபடி. வாலிபால், ஜூடோ, பளு தூக்குதல், ஸ்குவாஸ், வில்வித்தைகள், குத்துச் சண்டை, பூப்பந்தாட்டம், டேபிள் டென்னிஸ், சைக்கிள், ஜிம்னாஸ்டிக், நீச்சல், ஹாக்கி, டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், யோகா, மல்யுத்தம் முதலிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் நம்நாட்டின் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய நிர்வாகப் பகுதிகளிலிருந்து 18 வயதிற்குட்பட்ட வயதுப்பிரிவில் 5,500க்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும்,

சென்னை, நேரு விளையாட்டரங்கத்திற்கு வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உளி ஓவியங்கள் புத்தகத்தை வழங்கி வரவேற்றார்.

1,600க்கு மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்றனர். இந்த விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்திட 1,000க்கு மேற்பட்ட நடுவர்கள், 1,200க்கு மேற்பட்ட தன்னார்வலர்கள் துணைபுரிந்தார்கள்.

இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023இல் முதன்முறையாகத் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் உட்பட மொத்தம் 27 விளையாட்டுகள் காட்சி விளையாட்டுகளாக (DEMO Sports) இடம்பெற்றன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொன்றும் நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியவை குறித்த விவரங்கள் விளையாட்டு ஆர்வலர்களுக்கு வசதியாக இணையம் மூலம் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்திய விளையாட்டு ஆணையம், பல்வேறு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

போட்டிகள் சிறந்த முறையில், நடைபெறுவதற்கான கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்கள் வந்து தங்குவதற்கான இடவசதிகள், உணவு வசதிகள், போட்டி நடைபெறும் இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகச் சதுரங்கக் கூட்டமைப்பின் சார்பில், 2022 ஜூலை 28 முதல் ஆகஸ்டு 10 வரை 44ஆவது செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டிகளை, மாமல்லபுரத்தில் மகத்தான திருவிழாவாக நடத்தி உலகளவில் புகழ் குவித்தது தமிழ்நாடு அரசு.

அதேபோல, இந்த கேலோ இந்தியா இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகள் – 2023 தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வெற்றிகரமாக நடைபெற்று, தமிழ்நாட்டின் புகழ் மகுடத்தில் பதிக்கப்படும் மற்றொரு மாணிக்க முத்திரையாக அமையும் என்பது திண்ணம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.01.2024 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்–2023 தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

“எல்லார்க்கும் எல்லாம்” – “அனைத்துத் துறை வளர்ச்சி” - “அனைத்து மாவட்ட வளர்ச்சி” – “அனைத்து சமூக வளர்ச்சி” என்பதை உள்ளடக்கமாகக் கொண்ட நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக வளர உழைத்துக் கொண்டு வருகிறோம்.

ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது எப்படி நம் இலக்கோ அதேபோல, தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக நிலைநிறுத்துவதும் நம்முடைய குறிக்கோள்! இந்த இலக்கை நோக்கிப் பயணிக்கும்

இரண்டாமிடம் பிடித்த தமிழ்நாடு அணிக்கு வழங்கப்பட்ட கோப்பையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து.

தங்கப் பதக்கம் வென்ற சைக்கிளிங் வீராங்கனை செல்வி. இ. கலைச்செல்வி பல்வேறு சாதனைகள் படைக்க உதவும் வகையில் ரூ.8.24 இலட்சம் மதிப்பிலான பந்தய சக்கர நாற்காலியை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

வீல் சேர் ரேசிங் சைக்கிளிங் வாங்கி கொடுத்த மாண்புமிகு உதயா அண்ணன் அவர்களுக்கு ரொம்ப நன்றி!

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற சைக்கிளிங் வீராங்கனை செல்வி இ. கலைச்செல்வி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

நான் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இரவு நேர காப்பகத்தில் 5 வருடங்களாக தங்கி இருக்கிறேன். எனக்கு வீல் சேர் இல்லை. உடனே மாண்புமிகு உதயா அண்ணன் அவர்களிடம் போய் மனு கொடுத்தேன். ஒன்பது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சைக்கிள் எனக்கு வாங்கி கொடுத்தார். டெல்லியிலே நடந்த கேலோ இந்தியா போட்டியில் முதல் இடம் பிடித்து தங்கம் பதக்கம் வென்று இரண்டு இலட்சம் ரூபாய் கேஷ் அவார்டு வாங்கியிருக்கேன். அதற்காக மாண்புமிகு உதயா அண்ணன் அவர்களுக்கு ரொம்ப நன்றி சொல்கிறேன். மேலும், மேலும் எங்களுக்காக அவர் உதவி செய்து வருகிறார். மாற்றுத்திறனாளிகளான நாங்கள் அனைவருமே மாண்புமிகு உதயா அண்ணன் அவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறோம். இந்த சைக்கிள் எனக்கு கொடுத்ததுக்காக அவருக்கு நன்றி சொல்கிறேன். நான் இன்னமும் ஆசியாவுக்கு போகனும், ஒலிம்பிக் மெடல் வாங்கனும். இன்னும் மேலும், மேலும் உயர்வதற்கு அவர் எங்களுக்கு மிகவும் சப்போர்ட்டாக இருக்கிறார். முதல்முறையாக எங்களுக்கு கேஷ் அவார்டு கொடுத்ததிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் ரொம்ப நன்றி...

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி அவர்களை நான் பாராட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு சென்னை மாமல்லபுரத்தில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி, ஏ.டி.பி. சேலஞ்சர் டூர், சென்னை ஓப்பன் சேலஞ்சர், ஆடவர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி 2023, ஸ்குவாஷ் உலக கோப்பை 2023, அலைச்சறுக்குப் போட்டி, கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளை நம்முடைய தமிழ்நாட்டில் நடத்தியிருக்கிறோம். அதே நேரத்தில், விளையாட்டுக் கட்டமைப்புகளையும் உலகத் தரத்திற்கு உயர்த்திக் கொண்டு வருகிறோம்.

இந்தியாவிலேயே முதன்முறையாக, பாரா வீரர்களுக்கு 6 விளையாட்டு அரங்கங்கள், ராமநாதபுரத்தில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அரங்கம், சென்னை, மதுரை, திருச்சி, நீலகிரியில் “ஒலிம்பிக் அகாடமி”, முதல் கட்டமாக 10 சட்டமன்றத் தொகுதிகளில் “சிறு விளையாட்டரங்கம்” (மினி ஸ்டேடியம்), புதிய மாவட்டங்களான தென்காசி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, செங்கல்பட்டில் மாவட்ட விளையாட்டு மையங்கள் எனப் பல்வேறு உட்கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் ஜல்லிக்கட்டுக்கு மதுரையில் ரூ.62.77 கோடி மதிப்பீட்டில் “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்” கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்த அரங்கத்தை வரும் 24ஆம் தேதியன்று நான் திறந்து வைக்க இருக்கிறேன்.

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம் இந்த ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் வெகு விரைவில் துவங்கப்பட இருக்கிறது.

மணிப்பூரில் நிலவும் பிரச்சினைகளால் அங்குள்ள விளையாட்டு வீரர்கள் பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ள அவர்களைச் சகோதர உணர்வோடு தமிழ்நாட்டிற்கு வரவேற்று, பயிற்சிக் கொடுத்தது நமது திராவிட மாடல் அரசு. அவர்களில் சிலர், இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

கேலோ இந்தியா போட்டி தமிழ்நாட்டில் நடப்பது எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய மகிழ்ச்சி. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டாக இந்த முறை சேர்க்கப்பட்டிருக்கிறது.

கேலோ இந்தியா 2023 லோகோ-வில் வான்புகழ் வள்ளுவர் இடம் பெற்றிருக்கிறார். அந்தச் சிலை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், அய்யன் திருவள்ளுவருக்கு இந்திய நாட்டின் தென்முனையில் வானுயர அமைக்கப்பட்டது.

அதேபோல், ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிய வீரமங்கை வேலுநாச்சியார் சின்னமும் அதில் இடம் பெற்றிருப்பது நமக்குக் கூடுதல் பெருமை.

விளையாட்டையும், வளர்ச்சியின் இலக்காகக் கருதிச் செயல்பட்டு வருகிறோம். சுயமரியாதை, தன்னம்பிக்கையை மேம்படுத்தி, எல்லோருடைய நல்வாழ்வுக்கும் விளையாட்டு உதவுகிறது. அன்புப் பாலங்களையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கும் ஆற்றல் விளையாட்டுகளுக்கு உண்டு.

விளையாட்டுத்துறையிலும், தமிழ்நாட்டை உலக அளவில் கவனம் ஈர்க்கும் மாநிலமாக உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசின் அழைப்பை ஏற்று, இங்கு வருகை தந்துள்ள மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு மாநிலங்களில் இருந்து பங்கேற்றுள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களை வரவேற்று வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

❖ ❖ ❖

சென்னை, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை
ரூ.621 கோடி மதிப்பீட்டில் நான்கு வழித்தட உயர்மட்டச் சாலைப் பணி



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் - 19.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 19.01.2024 அன்று, நெடுஞ்சாலைத்துறை சார்பில் சென்னை, சைதாப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை ரூ.621 கோடி மதிப்பீட்டில் 3.20 கி.மீ. நீளத்திற்குக் கட்டப்படவுள்ள நான்கு வழித்தட உயர்மட்டச் சாலைக் கட்டுமானப் பணியைத் தொடங்கி வைத்தார்.

அண்ணா சாலையில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசல்

சுமார் 400 ஆண்டுகள் பழமைவாய்ந்த சென்னை, அண்ணா சாலை சென்னை மாநகரின் மிகவும் முக்கியமான சாலை என்பதால் போக்குவரத்து நெரிசல் மிகுதியாகக் காணப்படுகிறது. அண்ணா சாலையில் பல்வேறு அரசுத் துறைகளின் தலைமையகங்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் வர்த்தக மையங்கள், வணிக வளாகங்கள் வங்கித் தலைமையகங்கள், மருத்துவமனைகள், நட்சத்திர விடுதிகள், தொழில் நிறுவனங்கள் ஆகியன இயங்கி வருவதால் இச்சாலை எப்போதும் பரபரப்பாகக் காணப்படும்.

குறிப்பாக, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உள்ள 3.5 கி.மீ. தூரத்தைக் கடக்க சராசரியாக 25 முதல் 30 நிமிடங்கள் ஆகின்றன. இப்பகுதிக்குட்பட்ட அனைத்துச் சாலை சந்திப்புகளிலும் வாகனங்கள் அணிவகுத்து அதிகநேரம் காத்திருக்கும் சூழல் உள்ளது. இதிலும் குறிப்பாக நந்தனம் சந்திப்பு, சி.ஐ.டி. நகர் சந்திப்பு ஆகியவற்றில் காலை, மாலை நேரங்களில் வாகனங்கள் சுமார் 2 கி.மீ. நீளத்திற்குக் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

2022–2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை ரூ.621 கோடி மதிப்பீட்டிலான நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை

எனவே, இப்போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வுகாணும் வகையில், நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், சென்னை அண்ணா சாலையில், 5 குறுக்குச் சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வண்ணம், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்டச் சாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, தேனாம்பேட்டையிலிருந்து - சைதாப்பேட்டை வரை உள்ள முக்கிய சாலை சந்திப்புகளான ஆழ்வார்பேட்டை, தேனாம்பேட்டைப் பகுதிகளை பாண்டிபஜார் அண்ணா சாலையுடன் இணைக்கும் எல்டாம்ஸ்

சாலைச் சந்திப்பு, தி.நகர் பகுதிகளை இணைக்கும் தியாகராயா சாலைச் சந்திப்பு, டி.டி.கே. சாலையை அண்ணா சாலையுடன் இணைக்கும் SIET கல்லூரிச் சாலைச் சந்திப்பு, செனடாஃப் சாலைச் சந்திப்பு, சென்னை மாநகரின் முக்கிய சந்திப்புகளில் ஒன்றான நந்தனம் சந்திப்பு, தி.நகர் பேருந்து நிலையம், உஸ்மான் சாலையை இணைக்கும் CIT நகர் மூன்றாவது, முதல் பிரதான சாலைச் சந்திப்பு, சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகர் - ஜோன்ஸ் சாலைச் சந்திப்பு ஆகிய 7 முக்கிய சாலைச் சந்திப்புகளைக் கடக்கும் வகையில் சைதாப்பேட்டைப் பேருந்து நிலையம் வரை 3.20 கி.மீ. நீளத்திற்கு 14 மீ. அகலம் கொண்ட நான்கு வழித்தட உயர்மட்ட சாலை அமைக்க திட்டமிடப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அண்ணா சாலையின்கீழே சென்னை மெட்ரோ இரயிலின் சுரங்கப் பாதை செல்வதனால் இதை வடிவமைப்பது பெரும் சவாலாகவே இருந்து வந்தது. இப்பாலத்திலிருந்து வரும் அழுத்தம் சாலையின் கீழே தற்போது இயங்கிவரும் சென்னை மெட்ரோ இரயில் சுரங்கப் பாதைகளைச் சிறிதளவும் பாதிக்காத வண்ணம் வடிவமைக்க வேண்டி இருந்தது, மேலும் பாலத்தின் அடித்தளம் அமைக்க ஆழமான பள்ளங்களை, நீண்ட துளைகளை (piling technique) எடுக்க முடியாத சூழலும் இருந்தது. எனவே ஆழம் குறைந்த அடித்தளம் (shallow Foundation) மட்டுமே அமைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், இப்பகுதியில் மண்ணின் தாங்கும் திறன் குறைந்த அளவே உள்ளதால், ஆழம் குறைந்த அடித்தளம் கொண்டு வடிவமைப்பது சாத்தியமற்றதானது.

இதற்குத் தீர்வு காண பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாகச் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன வல்லுநர்கள், ஐ.ஐ.டி. மெட்ராஸ் வல்லுநர்கள், இங்கிலாந்து, ஜெர்மன் நாட்டு தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து இந்த உயர்மட்டச் சாலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு முயற்சிகளுக்குப்பிறகு பாலத்தின் அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் இரும்பினால் ஆன முன்வார்க்கப்பட்ட (prefabricated) கட்டமைப்பு உபகரணங்களைக் கொண்டும், மண்ணின் தாங்கு திறனை நவீன தொழில்நுட்பத்தைக்கொண்டு மேம்படுத்தி அடித்தளம் அமைக்கும் வகையிலும், வடிவமைக்கப்பட்டுக் கட்டுமானப் பணிகளை ரூ.621 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள இறுதி செய்யப்பட்டது. மேலும் இப்பணி (பொறியியல், கொள்முதல், கட்டுமானம்) ஒப்பந்த முறையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மெட்ரோ இரயில் சுரங்கங்கள் அமைந்துள்ள நேர்பாட்டில் கட்டப்படும் முதல் உயர்மட்டச் சாலை இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உயர்மட்டச் சாலையின் மூலம் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான 3.5 கி.மீ. தூரத்தை 3 முதல் 5 நிமிடத்திலேயே கடந்து செல்லலாம். மேலும், கட்டுமானம் நிறைவடையும் போது சென்னை மாநகரின் மிக நீண்ட பாலமாக இப்பாலம் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

மண்டல இணை இயக்குநர்கள் பணி ஆய்வுக் கூட்டம்

படமும்/செய்தியும்

சென்னை, கலைவாணர் அரங்கம் வளாகத்தில் உள்ள மாநிலச் செய்தி நிலையக் கூட்டரங்கில் 29.01.2024 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மண்டலங்களின் இணை இயக்குநர்களுடன் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

ரூ.634.99 கோடி மதிப்பீட்டில் 1,666 புதிய பேருந்துகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார் - 20.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 20.01.2024 அன்று, சென்னை, மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மத்தியப் பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ரூ.634.99 கோடி மதிப்பீட்டில் புதியதாக 1,666 பேருந்துகளைக் கொள்முதல் செய்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதன் முதற்கட்டமாக 100 BSVI பேருந்துகளைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு இன்றியமையாத போக்குவரத்துச் சேவைகளைத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வாயிலாக குறைந்த கட்டணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்துக் கிராமப் பகுதிகளுக்கும் பேருந்துப் பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக்குவரத்துச் சேவையை அளித்து வருகிறது. அரசு, அரசு உதவிபெறும் பள்ளி மாணவ மாணவியர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை, சாதாரண நகரக் கட்டணப் பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்காக "விடியல் பயணம்" திட்டம், பொதுமக்களின் தேவைக்கேற்பப் புதிய பேருந்து வழித்தடங்களைத் தொடங்கி வைத்தல், பழைய பேருந்துகளைப் புதுப்பித்தல், புதிய பேருந்துகளைக் கொள்முதல் செய்தல், பேருந்து பணிமனைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.10.2022 அன்று சட்டப்பேரவையில் 110-விதியின்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பொதுமக்களின் பேருந்து பயன்பாடு அதிகமான நிலையில், போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருவதாகவும், ரூ.500 கோடி மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என்றும், அடிச்சட்டம் (Chassis) நல்ல நிலையில் உள்ள 1,000 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவித்தார். மேலும், 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில்,

ரூ.500 கோடி மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என்றும், அடிச்சட்டம் (Chassis) நல்ல நிலையில் உள்ள 500 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி நீலகிரி மாவட்டத்திற்கென மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 16 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்புகளின்படி, பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் புதிய பேருந்துகளை இயக்கிடும் வகையிலும் ரூ.634.99 கோடி மதிப்பீட்டில் புதியதாக 1,666 BSVI பேருந்துகளைக் கொள்முதல் செய்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் முதற்கட்டமாக, விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 40 புதிய பேருந்துகளும், கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 40 புதிய பேருந்துகளும், கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 10 புதிய பேருந்துகளும், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 5 புதிய பேருந்துகளும், மதுரை அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 5 புதிய பேருந்துகளும் என மொத்தம் 100 புதிய BSVI பேருந்துகளைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். எஞ்சியுள்ள பேருந்துகள் அடுத்த இரண்டு மாதங்களில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட உள்ளது.

தெரிந்துகொள்வோம்

தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டுத் துறை

- அடிமைப் பழக்கத்தை ஏற்படுத்தும் மருந்துகள், மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் விற்பனை / விநியோகம் செய்வது மருந்து, அழகுச் சாதனச்சட்டம், 1940, மருந்துகள் விதிகள், 1945இன் படி குற்றமாகும்.
- தமிழ்நாடு மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையின் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள மொத்த, சில்லறை மருந்து விற்பனை நிறுவனங்களில் தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மருந்துகள், அழகுச் சாதனச்சட்டம் 1940, மருந்து விதிகள், 1945இன்கீழ் விதி மீறல்களில் ஈடுபட்ட மொத்த, சில்லறை மருந்து விற்பனை நிறுவனங்கள் மீது கடந்த (01.04.2023-31.12.2023) 9 மாதங்களில் 219 மருந்து விற்பனை உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதுடன் 381 மருந்து விற்பனையாளர்கள்மீது நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டு உள்ளது. மேலும் தரமற்ற மருந்துகளை விற்பனை செய்த மொத்த விற்பனை நிறுவனங்களின் 21 மருந்து விற்பனை உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.
- அடிமைப் பழக்கத்தை ஏற்படுத்தும் மருந்துகளை மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் விற்பனை / விநியோகம் செய்த 9 மருந்து விற்பனை உரிமங்கள் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.
- இத்துறை மூலம் இனி வருங்காலங்களிலும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அடிமைப் பழக்கத்தை ஏற்படுத்தும் மருந்துகள், மருத்துவரின் பரிந்துரைச்சீட்டு இல்லாமல் விற்பனை / விநியோகம் செய்யும் நிறுவனங்கள் மீது மருந்து மற்றும் அழகு சாதனச்சட்டம் 1940, மருந்து விதிகள், 1945இன்கீழ் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்
தலைமையிலான அரசின்
சாதனைகளை விளக்கும்
"சமூக ஊடகப் பிரிவு"

அரசின் திட்டங்களைக் கடைக்கோடி மக்களுக்கும் கொண்டுசேர்க்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மற்றுமொரு மணிமகுடம் "சமூக ஊடகப் பிரிவு"

சட்டம் ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரிக்க ரூ.6.50 கோடி மதிப்பில் காவல்துறையின் பயன்பாட்டிற்கு 53 வாகனங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 22.01.2024 அன்று, தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகரக் காவல்துறையின் பயன்பாட்டிற்காக ரூ.6.50 கோடி மதிப்பிலான 25 ஹுண்டாய் கிரெட்டா, 8 இன்னோவா கிரிஸ்டா, 20 பொலிரோ ஜீப் ஆகிய வாகனங்களின் சேவைகளை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

சென்னைப் பெருநகரக் காவல் துறையின் சேவையை மேம்படுத்துவதற்காகவும், சென்னை பெருநகரக் காவல் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களுக்கு விரைந்து சேவைகளை வழங்குவதற்காகவும் இவ்வரசு கடந்த இரண்டரை ஆண்டுகளில் ரூ.59.73 கோடி மதிப்பீட்டில் 283 நான்கு சக்கர, இருசக்கர வாகனங்களைக் கொள்முதல் செய்து காவல்துறையின் பயன்பாட்டிற்காக வழங்கியுள்ளது.

பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ், அத்தியாவசியத் தேடல், தேவைக்கான உபகரணங்களைக் கொள்முதல் செய்ய ரூ.74.62 இலட்சமும், சைபர் செயலி, சைபர் விழிப்புணர்வுக்கு ரூ.54.97 இலட்சமும், காவல் நிலையம், கட்டடங்கள், தங்குமிடம், குடியிருப்புக்கு ரூ.35.82 கோடியும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், உபகரணங்கள் கொள்முதல், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் ரூ.44.38 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார் – 22.01.2024

2023-2024ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையில், மாநிலத்திலுள்ள காவல்துறை அதிகாரிகளுக்கு முக்கியமாக, சரக எல்லைக்குட்பட்ட மிக முக்கிய பிரமுகர்களின் வழிக்காவல் பணி, சட்டம், ஒழுங்கு சம்பவங்கள், குற்றங்களைத் தடுப்பது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது உள்ளிட்ட

பல்வேறு முனைகளில் காவல்துறையின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு ஈடாக 283 நான்கு சக்கர வாகனங்கள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் ஒரு பகுதியாக, சென்னைப் பெருநகரக் காவல்துறையின் பயன்பாட்டிற்காக ரூ.6.50 கோடி மதிப்பிலான மேம்படுத்தப்பட்ட நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய 25 ஹூண்டாய் கிரெட்டா, 8 இன்னோவா கிரிஸ்டா, 20 பொலிரோ ஜீப் வாகனங்களின் சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இதன்மூலம், சென்னைப் பெருநகரக் காவல் எல்லைக்குள் குற்றங்களைக் களையவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், சட்டம் ஒழுங்கினைச் சிறந்த முறையில் பராமரிக்கவும், பொதுமக்களுக்கு, குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிடவும் 25 வாகனங்கள் பயன்படுத்தப்படும். மேலும், இவ்வாகனங்களிலிருந்து சென்னைப் பெருநகரக் காவல்துறையின் காவல்துணை ஆணையாளர்கள், காவல் உதவி ஆணையாளர்கள், சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றப்பிரிவு, சிறப்புப் பிரிவு காவல் ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக மற்ற வாகனங்கள் வழங்கப்படும்.

திருக்குறள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகக் கன்னியாகுமரி முதல் சென்னை வரை மிதிவண்டிப் பயணம்

படமும்/செய்தியும்

சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில், 30.01.2024 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களை விருதுநகர் மாவட்டத்தில் பிப்ரவரி 2, 3 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள "திருக்குறள் மாணவர் மாநாடு 2024" முன்னிட்டு, மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் திருக்குறள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகக் கன்னியாகுமரி முதல் சென்னை வரை விழிப்புணர்வு மிதிவண்டிப் பயணம் மேற்கொண்ட விருதுநகர் ஆசிரியர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பாகச் சேவைபுரிந்தவர்களுக்கான விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்காகச் சிறப்பாகச் சேவை புரிந்தமைக்காகச் சிறந்த சமூக பணியாளர் விருது, சிறந்த நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆசிரியருக்கான விருது, சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருது, மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆரம்பநிலைப் பயிற்சி மைய ஆசிரியருக்கான விருது, மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய ஓட்டுநர், நடத்துனருக்கான விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில், அவர்களது கல்வி, வேலைவாய்ப்பில் அதிகம் கவனம் செலுத்தி வருவதோடு, மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ, மாத பராமரிப்பு உதவித்தொகை ரூ.2,000 என உயர்த்தி வழங்கியது, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக மறுவாழ்வு இல்லங்கள் அமைப்பது போன்ற பல புதிய முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், பொதுக் கட்டடங்களில் தடையற்ற சூழல் அமைப்பது, நவீன உதவி உபகரணங்கள் வழங்குவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
விருதுகள் வழங்கி சிறப்பித்தார்கள் - 22.01.2024

போன்ற பல்வேறுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும், அவர்களைச் சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பாக சேவைபுரிந்தவர்களுக்கும், சிறந்த நிறுவனங்கள், தடைகளைக் கடந்து சிறப்பாகப் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாகவும் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாகச் சேவைப் புரிந்தமைக்காகச் சிறந்த சமூகப் பணியாளர் விருதினை திரு. எ.மோகன் அவர்களுக்கும், சிறந்த நிறுவனத்திற்கான விருதினைத் தூத்துக்குடி மாவட்டம்,கோவில்பட்டி, ஆக்டிவ் மைண்ட்ஸ் தொண்டு நிறுவனத்திற்கும், சிறந்த ஆசிரியருக்கான விருதினை -

மனவளர்ச்சி குன்றியோருக்குக் கற்பித்ததற்காக தி ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டி ஆஃப் திருச்சிராப்பள்ளி ஆசிரியர் அ.வாசுகி தேவி அவர்களுக்கும், செவித்திறன் குறைபாடுடையோருக்குக் கற்பித்ததற்காக கிருஷ்ணகிரி – அண்ணா நகர், நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆசிரியர் திரு. ஜா.அருண்குமார் அவர்களுக்கும், பார்வைத்திறன் குறைபாடுடையோருக்குக் கற்பித்ததற்காக மதுரை, செயின்ட் ஜோசப் பார்வையற்றோர் பள்ளி ஆசிரியர் சகோதரி அ. பாக்கியமேரி அவர்களுக்கும்;

சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவருக்கான விருதினைக் கை, கால் பாதிக்கப்பட்டோர்/ தொழுநோய் குணமடைந்தோர் பிரிவில் திருமதி எஸ்.நீலாவதி (சிறந்த சுயதொழில் புரிபவர்), திரு. செ.சுதீஷ்குமார் (சிறந்த பணியாளர்), அறிவுசார் குறையுடையோர் பிரிவில் திரு. பா.முத்துக்குமார், செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பிரிவில் திருமதி ரா.விஜயலெட்சுமி, பல்வகை மாற்றுத்திறனாளிப் பிரிவில் செல்வி. வி.சௌந்திர வள்ளி, மனநோயால் பாதிக்கப்பட்டோர் பிரிவில் திருமதி இ.ஜாக்குலின் சகாயராணி, புற உலகச் சிந்தனையற்றோர்/குறிப்பிட்ட கற்றலில் குறைபாடுடையோர் பிரிவில் திரு. ஆ.பிரேம்சங்கர் ஆகியோருக்கும்;

மாற்றுத்திறனாளிகளை அதிகளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருதினை காஞ்சிபுரம் - பச்சையப்பாஸ் சில்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், சிறந்த ஆரம்பநிலைப் பயிற்சி மைய ஆசிரியருக்கான விருதினை செவித்திறன் குறைபாடுடையோருக்குக் கற்பித்ததற்காக காஞ்சிபுரம் - தமிழ்நாடு அரசு செவித்திறன் குறையுடைய இளம் சிறார்களுக்கான இலவச ஆரம்பப் பயிற்சி மைய ஆசிரியர் திருமதி எம். பாலகுஜாம்பாள் அவர்களுக்கும், அறிவுசார் குறையுடையோருக்குக் கற்பித்ததற்காகக் கன்னியாகுமரி - சாந்தி நிலையம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி ஆசிரியர் திரு. ஜெ.ஜெயசீலன் அவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாகப் பணியாற்றிய சிறந்த ஓட்டுநருக்கான விருதினை திரு. E. சுந்தர் வேலு அவர்களுக்கும், சிறந்த நடத்துனருக்கான விருதினை திரு. A.தர்சியஸ் ஸ்டீபன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மிக்ஜாம் புயல் பேரிடர் மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட 1,200 மீனவர்களுக்குப் பரிசுப் பொருட்கள்

படமும்/செய்தியும்

சென்னை, இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 24.01.2024 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் பேரிடர் மீட்பு, நிவாரணப் பணிகளில் படகுகளில் ஈடுபட்ட 1,200 மீனவர்களுக்குப் பரிசுப் பொருட்கள், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

தெரிந்துகொள்வோம்

‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ எனும் புதிய திட்ட முகாம்

பொதுமக்கள் முகாம்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு அரசு வேண்டுகோள்!

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையிலான திராவிட மாடல் அரசு, ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் மக்கள் நலனை முன்னிறுத்தி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பல்வேறுத் திட்டங்களைத் தீட்டி, அவற்றைத் திறம்படச் செயல்படுத்தி, முத்திரைப் பதிக்கும் வகையில் சாதனை படைத்து வருகிறது. அந்த வகையில்,

உங்கள் தொகுதியில் முதலமைச்சர்;
இல்லம் தேடிக் கல்வித் திட்டம்;
மக்களைத் தேடி மருத்துவம்;
நான் முதல்வன்;
இன்னுயிர்க் காப்போம்–நம்மைக் காக்கும் 48;
புதுமைப் பெண்;
முதலமைச்சரின் காலை உணவு;
கலைஞர் மகளிர் உரிமைத் தொகை;
கள ஆய்வில் முதலமைச்சர்;
மக்களுடன் முதல்வர்

போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்கள் மக்களுக்காகத் தீட்டப்பட்டு, அவை அனைத்தும் கடைக்கோடியில் வாழக்கூடிய மனிதரையும் சென்றடையத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இந்தியாவிலேயே தமிழ்நாட்டினை முன்னணி மாநிலமாகத் தலைநிமிரச் செய்திருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்.

★ அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் மக்களைச் சென்றடையும் வகையிலும், நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடும் வகையிலும், மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், முழு அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறார்கள்.

★ இந்நிலையில், அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்குத் தடையின்றி விரைந்து மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில், ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 23.11.2023 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, இத்திட்டம் 31.01.2024 புதன்கிழமை முதல் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

★ ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்ட முகாம், அனைத்து மாவட்டங்களிலும், குறிப்பிட்ட வட்டத்தில், ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும். மேலும், முகாம் நடைபெறும் வட்டம் குறித்த தகவல், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முன்கூட்டியே பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

★ இத்திட்டத்தின்படி, மாவட்ட ஆட்சியர், மாவட்ட அளவிலான இதர உயர் அலுவலர்கள், காலை 9 மணி முதல், மறுநாள் காலை 9 மணி வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்தில் தங்கி, பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் / சேவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்வர். கள ஆய்வின் போது பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள், மேம்பட்ட சேவைகள் வழங்குதல் / திட்டங்களை விரைவுபடுத்துதல் தொடர்பாக உரிய தீர்வு காண்பர். மேலும், அன்றையதினம், மாவட்ட ஆட்சியர்கள் மக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்று அவற்றின்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

★ அரசின் சேவைகளை எளிதாகவும், விரைவாகவும் பெற்றிட ஏதுவாக, இந்த முகாமினைப் பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், துறை அலுவலர்கள் பொதுமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலித்து, எவ்வித தாமதமும் இன்றி அவற்றை நிறைவேற்றிட வழிவகை காண வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்கள்.

ரூ.21.81 கோடிச் செலவில் 16 நவீன நெல் சேமிப்புத் தளங்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 22.01.2024 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ரூ.21.81 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களைத் திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 71 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியாகும் நெல்லைக் கொள்முதல் செய்து அரவைக்கு அனுப்புவதில் ஒரு நெல்மணி கூட வீணாகக்கூடாது என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்குச் செயல் வடிவம் கொடுத்திடும் வகையில், 2022-2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பத்து மாவட்டங்களில் பதினெட்டு இடங்களில் மொத்தம் 2,86,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் மொத்தம் ரூ.238.07 கோடி மதிப்பீட்டில் நிறுவ ஆணையிடப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 190 சேமிப்பு தளங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.02.2023, 25.04.2023 ஆகிய நாட்களில் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டன.

கட்டிமுடிக்கப்பட்ட 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களைத் திறந்து வைத்தல்

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டம், எடமணல் கிராமத்தில் ரூ.21.81 கோடிச் செலவில் சாலை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள 16,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
> திறந்து வைத்தார் - 22.01.2024

மழைக்காலங்களில் விவசாயிகளுடைய உழைப்பில் விளைந்த நெல்மணிகள் சேதமடையாமல் காத்திடும் வகையில் இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021லிருந்து இதுநாள் வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் மொத்தம் ரூ.219.92 கோடிச் செலவில் 2.75 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 206 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 71 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பணியாளர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்குதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்களால் வழங்கப்பட்ட ஒரு நாள் ஊதியமான ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு உணவு, உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி அவர்கள் வழங்கினார்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 77ஆவது நினைவு நாள்

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 77ஆவது நினைவு நாளையொட்டித் தமிழ்நாடு அரசின் சார்பில் 30.01.2023 அன்று சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலைக்குக்கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம், அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா.மூர்த்தி, துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், ஆளுநரின் செயலாளர் திரு. இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தெரிந்துகொள்வோம்

தேவையான இடங்களில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் “நெல் கொள்முதல் நிலையங்கள்”

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் இரண்டு விவசாயிகள், வேளாண்மை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

❖ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் நாளன்று தொடங்கும் நெல் கொள்முதல் பணியானது, உழவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு மாதம் முன்னதாகவே செப்டம்பர் முதல் நாள் முதல் நெல் கொள்முதல் செய்திட ஒன்றிய அரசிடம் அனுமதி பெறப்பட்டுக் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

❖ தமிழ்நாட்டில் 01.09.2023 முதல் நாளது தேதி வரை 5,54,874 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 87,811 விவசாயிகளுக்கு ரூ.1,257.81 கோடி அவர்கள் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

❖ தற்போது காவிரிப் பாசன மாவட்டங்களில் (Delta Districts) சம்பா அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நெல் வரத்து வரத் துவங்கியுள்ளதால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டுத் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

❖ காவிரி மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் 957 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு 195 நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தங்கள் நெல்லை எப்போது கொண்டுவந்தாலும் கொள்முதல் செய்ய இவை தயார் நிலையில் உள்ளன.

❖ 12 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில அரசு வழங்கும் ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க ஆணையிட்டுத் தற்போது நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குவிண்டால் ஒன்றிற்குச் சன்னரக நெல்லுக்கு மாநில அரசின் பங்களிப்பு ரூ.107ம் சேர்த்து ரூ.2,310க்கும், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு மாநில அரசின் பங்களிப்பு ரூ.82ம் சேர்த்து ரூ.2,265க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

❖ நெல் கொள்முதல் தொடர்பாக விவசாயிகள் புகார் தெரிவிக்கும் பொருட்டுக் கட்டணமில்லாத் தொலைபேசி எண் (உழவர் உதவி மையம்) 1800 599 3540, தொடர்பு கொள்ள வேண்டிய துறை உயர் அலுவலர்களின் அலைபேசி எண்கள் கொண்ட அறிவிப்புப் பதாகையும் புகார் பெட்டியும் ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்புச் சம்பாப் பருவத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் தங்கள் நெல்லினை இவற்றில் விற்றுப் பயன்பெற்று வருகிறார்கள்.

தொழில் நிறுவனங்களுக்கு 70 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடாக ரூ.9.25 கோடி மானியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 22.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில், சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா திட்டத்தின்கீழ் 6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்குத் திட்ட ஒப்புதல் அரசாணைகளையும், ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கான அரசு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 17 தொழில் நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத்தொகையாக ரூ.9.25 கோடிக்கான காசோலைகளை வழங்கினார்.

சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காத் திட்டத்தின்கீழ் 6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்குத் திட்ட ஒப்புதல் அரசாணைகள் வழங்குதல்

நூல் உற்பத்தி மற்றும் பின்னலாடைத் தொழிலில் முதல் இடத்தில் இருக்கும் தமிழ்நாட்டினை, இந்தியாவின் சிறந்த வணிகத் தளமாக நிலைநிறுத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், அதிகமான தொழில் முதலீட்டினை ஈர்த்து அதன்மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியினை அடைந்திடவும், சிறிய அளவிலானத் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதன் மூலம் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா திட்டம் 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போதிலும் திட்ட வழிமுறைகளில் இருந்த இடர்ப்பாடுகள் காரணமாகத் தமிழ்நாட்டில் யாரும் ஜவுளிப்பூங்கா அமைக்க முன்வரவில்லை. இந்த இடர்பாடுகளைக் களையும் வகையில் சிறு, நடுத்தர ஜவுளி தொழில்முனைவோர்கள் ஜவுளி பூங்காக்கள் அமைக்கும் வழிமுறைகளை எளிதாக்கும் பொருட்டு, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காத் திட்டத்திற்கான நிபந்தனைகளைத் தளர்த்தி 2022ஆம் ஆண்டில் இவ்வரசு ஆணையிட்டது.

அதன்படி, தற்போது சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காத் திட்டத்தின்கீழ், 2 ஏக்கர் நிலத்தில் குறைந்தபட்சம் 3 உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும், இதற்கென உட்கட்டமைப்பு வசதிகள், தொழிற்சாலை கட்டடங்கள் அமைக்க தகுதியான திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு (அதிகபட்சமாக ரூ.2.50 கோடி) வரை மானியமாகத் தமிழ்நாடு அரசு வழங்கிடவும் ஆணையிட்டுள்ளது. இதன் காரணமாக, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கு ஜவுளித்

தொழில்முனைவோர் அதிக அளவில் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டத்தின்கீழ், திருவள்ளூர் – திருப்பதி மினிடெக்ஸ்டைல் பார்க், தருமபுரி – பாரத் மினிடெக்ஸ்டைல் பார்க், கரூர் – VMD மினிடெக்ஸ்டைல் பார்க், திருப்பூர் – கார்த்திகேயா வீவிங் பார்க், கரூர் – ஸ்ரீ பிரனவ் மினிடெக்ஸ்டைல் பார்க், கரூர் – நாச்சி மினிடெக்ஸ்டைல் பார்க் ஆகிய 6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்கு, திட்ட செயலாக்கத்திற்கான மொத்த மானியத் தொகை ரூ.13.75 கோடியில், முதற்கட்டமாக ரூ.5 கோடி ஒப்பளிப்புச் செய்து அதற்கானத் திட்ட ஒப்புதல் அரசாணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மினி டெக்ஸ்டைல் பார்க் நிருவாகிகளிடம் வழங்கினார்.

இதன்மூலம், சிறு மற்றும் நடுத்தர-ஜவுளி தொழில்முனைவோர்கள் பயன்பெறுவதோடு சுமார் 1,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஒரு பூங்காவில் ஆண்டுக்கு 24 இலட்சம் மீட்டர் உற்பத்தி வீதம் 6 பூங்காக்களில் 144 இலட்சம் மீட்டர் அளவிற்குத் துணி வகைகள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜவுளித் தொழில்முனைவோர்களுக்கான அரசு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ்

முதற்கட்டமாக 17 தொழில் நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத்தொகையாக ரூ.9.25 கோடி வழங்குதல்

தமிழ்நாட்டின் கைத்தறி, விசைத்தறி, நூற்பு, பதனிடுதல் உள்ளிட்டப் பிரிவுகளில் நவீன, ஒருங்கிணைந்த, உலகத் தரம் வாய்ந்த ஜவுளித் துறையை உருவாக்கவும், உள்நாட்டு சந்தை, வெளிநாட்டு ஏற்றுமதிக்காகவும் உற்பத்திச் செலவைக் குறைத்து, உயர்தர ஜவுளி ஆடைகள் உற்பத்திச் செய்யவும், புதுமை, பன்முகத்தன்மை, மதிப்புக் கூட்டல் ஆகியவற்றில் அதிக முக்கியத்துவம் அளித்து ஜவுளித்துறையை ஊக்குவிக்கவும், ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஜவுளித் தொழில் முனைவோர்கள் தங்களது நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டில் 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கான முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 17 ஜவுளி நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத் தொகை ரூ.9.25 கோடி வழங்கிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 நிறுவனங்களுக்கு மானியத்தொகை ரூ.5.33 கோடிக்கான காசோலையை வழங்கினார்.

படமும்/செய்தியும்

இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய பிரிவுகளில் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்

சென்னை வர்த்தக மையத்தில் 12.01.2024 அன்று நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகியப் பிரிவுகளில் கனடா பாலசுந்தரம் இளையதம்பி, மலேசியா மனோன்மணி தேவி, கொரியா ஆரோக்கியராஜ், சிங்கப்பூர் மா.அன்பழகன், கனடா சு.தீனதயாளன், வேல்ஸ் மதன் எஸ். ராஜா ஆகியோருக்கு உலகத் தமிழ்ச் சங்க விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், முனைவர் அருள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசு கலை, அறிவியல், பொறியியல், தொழில்நுட்பக்கல்லூரிகளில் ரூ.96.75 கோடிச் செலவில் கல்வி சார் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 22.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 22.01.2024 அன்று, தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் ரூ.96.75 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், கலையரங்கம், விருந்தினர் மாளிகை, உடற்பயிற்சிக்கூடம், அணுகுசாலை, விடுதிகள், பணிமனைகள், கழிவறைத் தொகுதிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கானக் கட்டடம் போன்ற பல்வேறுக் கட்டடங்களைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்விப் பயிலப் புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் மாதம் ரூ.1,000 உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள்வரை உயர்கல்வித் துறை சார்பில் மொத்தம் ரூ.545 கோடி மதிப்பீட்டிலான வகுப்பறைகள், ஆய்வகங்கள், விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கல்விசார் கட்டடங்கள் கட்டப்பட்டு, மாணவர்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

உயர்கல்வித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்தல்

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாய்பேட்டைக் கிராமத்தில் அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.4.04 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கலையரங்கம், விருந்தினர் மாளிகை, உடற்பயிற்சிக் கூடம், அணுகு சாலை;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.94 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள ஆறு ஆய்வகக் கட்டடங்கள், பெருந்துறை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.2.16 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறைகள், இரண்டு ஆய்வகக் கட்டடங்கள்;

சேலம் - அரசு பொறியியல் கல்லூரியில் ரூ.8.66 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள பெண்கள் விடுதிக் கட்டடம், சேலம் - பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.2 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கலைஞர் ஆய்வு மையக் கட்டடம்;

கோயம்புத்தூர் – அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.8.65 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் விடுதிக் கட்டடம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் - திரு. ஆ.கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரியில் ரூ.2.64 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள், கிருஷ்ணகிரி – அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் ரூ.2.95 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள், 5 கழிவறைத் தொகுதிக் கட்டடங்கள்;

கள்ளக்குறிச்சி - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.12.43 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடம், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் - அரசு பொறியியல் கல்லூரியில் ரூ.4.84 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள முதுகலை மாணவர்களுக்கான வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம், நாகப்பாடி - அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.2.93 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறைகள், 3 ஆய்வகக் கட்டடங்கள், பணிமனை, உடல் ஊனமுற்றோருக்கான கழிப்பறைக் கட்டடம், செய்யாறு - அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் ரூ.5.28 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 12 ஆய்வகக் கட்டடங்கள்;

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.11.33 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடம், திருநெல்வேலி - அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் ரூ.8.02 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள பணிமனைக் கட்டடம்;

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் - அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் ரூ.2.86 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள், தூத்துக்குடி மாவட்டம், - எட்டயபுரத்தில் பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் ரூ.2.18 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள்;

திருச்சிராப்பள்ளி, சேதுராபட்டி - அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.2.18 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 3 வகுப்பறைகள், 1 ஆய்வகம், கூடுதல் பணிமனைக் கட்டடம், திருச்சிராப்பள்ளி - அரசு கலைக் கல்லூரி மற்றும் பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியில் தலா ரூ.2.66 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

மதுரை - ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.2.99 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், விருதுநகர் மாவட்டம், சிவகாசி - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.35 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைகள், பெண்கள் கழிப்பறை தொகுதிக் கட்டடங்கள்;

என மொத்தம் ரூ.96.75 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித்துறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பெரியபாளையம், மேல்மலையனூர், ஆனைமலை ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 22.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

இறையருள் பெறத் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவளிப்பதே அன்னதானத் திட்டமாகும். தற்போது இத்திட்டத்தில் 8 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 756 திருக்கோயில்களில் மதியவேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் சுமார் 82,000 பக்தர்கள் பயன்பெறுவதோடு, இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.105 கோடிச் செலவிடப்படுகிறது.

நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டமானது ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், இந்த அரசு பொறுப்பேற்றப்பின், அத்திட்டத்தினை விரிவுபடுத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 16.09.2021 அன்று திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களிலும், கடந்த 31.12.2022 அன்று இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

2023 – 2024ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், "நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் எட்டுத் திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இத்திட்டமானது விரிவுபடுத்தப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது. அதன்படி அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் மற்றும் அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ், பக்தர்களுக்கு காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை அன்னதானம் வழங்கப்படும்.

திருக்கோயில்களில் தயாரிக்கப்படும் அன்னதானம், பிரசாதம் தரத்துடனும், சுகாதாரமான முறையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்திட இந்திய உணவுப் பாதுகாப்பு, தரப்படுத்துதல் ஆணையத்தால் வழங்கப்படும் உணவு தரப் பாதுகாப்புச் சான்றிதழை (BHOG) 523 திருக்கோயில்கள் பெற்று, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தெரிந்துகொள்வோம்

மனித-வனவிலங்கு மோதல்களில் ஏற்படும் உயிரிழப்பு நிவாரணத் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவு – 13.01.2024

மனித வனவிலங்கு மோதல்களைக் குறைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதே நேரத்தில் மனித-வனவிலங்கு மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கிட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு 03.11.2021 அன்று வெளியிட்ட அரசாணையின்படி இத்தகைய மோதல்களில் மனித உயிரிழப்பு அல்லது நிரந்தர இயலாமைக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.4 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இந்த இழப்பீடு கோரிக்கைகளை உடனடியாக வழங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு ரூ.10 கோடி நிறும நிதி (Corpus Fund) ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், மனித-வனவிலங்கு மோதல்களில் ஏற்படும் உயிரிழப்புகளுக்குக் கூடுதல் நிவாரண உதவித் தொகை வழங்கிட வேண்டுமென அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த முறையீடுகளை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்து இத்தகைய நிகழ்வுகளில் பாதிக்கப்படும் குடும்பங்களின் சிரமங்களைக் களைவதற்காக, மனித உயிரிழப்பு, நிரந்தர இயலாமைக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.5 இலட்சம் என்பதை ரூ.10 இலட்சமாக இரு மடங்கு உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது.

தெரிந்துகொள்வோம்

தமிழ்நாட்டில் கழுகுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

- அண்டை மாநிலங்களான கேரளா, கருநாடகா மாநிலங்களின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற தமிழ்நாடு வனத்துறையின் இரண்டாவது ஒருங்கிணைந்த கழுகுகள் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் கழுகுகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அறிய முடிகிறது.

- 25.02.2023, 26.02.2023 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட முதல் ஒருங்கிணைந்த கழுகுகள் கணக்கெடுப்பு மூலம் கழுகுகளின் மொத்த எண்ணிக்கை 246 என மதிப்பிடப்பட்டுள்ளது. முதுமலைப் புலிகள் காப்பகம், அதை ஒட்டிய நிலப்பரப்புகளான, சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், கேரளாவின் வயநாடு, பந்திப்பூர் புலிகள் காப்பகம், கருநாடகாவின் நாகர்ஹோல் புலிகள் காப்பகம் ஆகியவை வரலாற்று ரீதியாகக் கழுகுகளின் எண்ணிக்கை ஆதரிக்கப்படுகிறது.

- கழுகுகளின் இரண்டாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு 30.12.2023, 31.12.2023 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. இந்த முறை பில்லிகிரி ரங்கநாத சுவாமி கோவில் புலிகள் காப்பகம், கருநாடகா, தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுப்பில் இடம்பெற்றது. வாண்டேஜ் பாயின்ட் எண்ணிக்கை முறை பின்பற்றப்பட்ட இந்தக் கணக்கெடுப்பில் 139 வாண்டேஜ் பாயின்ட்களில் நான்கு அமர்வுகளாக இரண்டு நாட்களில் 8 மணி நேரம், அனைத்து 139 வான்டேஜ் புள்ளிகளிலும் நடத்தப்பட்டது. கழுகுகளின் மொத்த எண்ணிக்கை 320 என மதிப்பிடப்பட்டுள்ளது.

- தென்னிந்தியாவில் எஞ்சியிருக்கும் கழுகுகளின் எண்ணிக்கையை அதிகரித்துப் பாதுகாப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தலைமை வன உயிரினக் காப்பாளர் தலைமையில் மாநில அளவிலான கழுகுகள் பாதுகாப்புக் குழுவை அமைத்துள்ளது.

- மேலும், கழுகுகளின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கியக் காரணமாக இருக்கும் கால்நடை சிகிச்சைக்காக விற்கப்படும் டிக்ளோஃபெனாக் மருந்து விற்பனைக்கு மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் மூலம் தடை விதித்துள்ளது.

- தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பலமுறை மருந்து கட்டுப்பாட்டுத் துறையினரால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தடை செய்யப்பட்ட மருந்தை விற்பனை செய்ததற்கு 104 உற்பத்தியாளர்கள், மல்டி டோஸ் டிக்ளோஃபெனாக் விற்பனையாளர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

- மருந்தகங்களில் வழக்கமான ஆய்வு, சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பணிபுரியும் மருந்தாளுநர்கள், கால்நடை மருத்துவர்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரம். கழுகுகள் உணவு தேடும் பகுதிகளில் நீர் துளைகளை உருவாக்குதல். மரபியல், அதன் கூடு கட்டுதல், உணவுத் தேடுதல், கால்நடை மருத்துவப் பயன்பாட்டிற்குப் பாதுகாப்பான மருந்துகள் கிடைப்பது போன்ற கழுகு பற்றிய ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.

- கழுகுகளுக்கு உணவு ஆதாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் இதுவரை இருந்து வந்த வனவிலங்குச் சடலங்களைப் புதைக்கும் நடைமுறையை மாற்றி, பிரேத பரிசோதனைக்குப் பின் அந்த சடலங்கள் வெட்ட வெளியில் இடப்படுகின்றன. தமிழ்நாடு அரசு எடுத்து வரும் இந்த நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாட்டில் கழுகுகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்து சூழல் சமநிலையை எய்த இயலும்.



காஞ்சிபுரத்தில் ரூ.1,003 கோடி முதலீட்டில்

840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மின்னணுச் சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது - 23.01.2024

❖❖❖❖❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 23.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் (Corning International Corporation) மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் (Optiemus Infracom Limited) ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் (Bharat Innovative Glass Technologies Private Limited - BIG TECH) நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட்- பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில், ரூ.1,003 கோடி முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், உலகத்தரம் வாய்ந்த மின்னணுச் சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தமிழ்நாடு அரசின் முதலீடு ஊக்குவிப்பு முகமையான 'Guidance', 'BIG TECH' இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காகத் தமிழ்நாடு அரசின் தொழில்துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

மேலும், அதிக அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்படக்கூடிய உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களையும் (capital intensive high-tech Industries), பெருமளவிலான வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழில்களையும் (Employment intensive Industries) ஆகிய இரு தொழில்களையும் ஈர்த்திட பல்வேறு முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சென்னையில் இம்மாதம் 7, 8 ஆகிய தேதிகளில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு, முன்னெப்போதும் இல்லாத அளவாக, ரூ.6,64,180 கோடி முதலீடு, 26,90,657 நபர்களுக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன், இந்தியாவைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாகும். அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட கார்னிங் இண்டர்நேஷனல் நிறுவனம் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கைப்பேசிகள், மடிக்கணினிகள், கைக் கணினிகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் வலுவூட்டப்பட்ட 'கார்னிங் கொரில்லா® கிளாஸ்' உற்பத்தி மேற்கொள்ளும் நிறுவனம் ஆகும்.

ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனம், இந்தியாவில் கைபேசிக் கூறுகள், மடிக்கணினி உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த நிறுவனம் ஆகும்.

பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட்- பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், ரூ.1,003 கோடி முதலீட்டில், 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், நவீன முறையில் முன்-கவர் கண்ணாடி (Front cover glass) தயாரித்து, இந்தியாவில் உள்ள பேனல் தயாரிப்பாளர்கள், கைப்பேசி உற்பத்தியாளர்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், நாட்டிலேயே முதன்முறையாக Precision glass processing தொழில்நுட்பத்தில் உற்பத்திச் செய்யப்பட்டதாக இருக்கும்.

தமிழ்நாட்டில் இதற்கான இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு அரசின் முதலீடு ஊக்குவிப்பு முகமையான 'Guidance', பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் இடையேப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள், எதிர்கால முன்னெடுப்புகள் குறித்த கருத்துப் பரிமாற்ற பணிமனைத் தொடக்கம்

சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில், 03.02.2024 அன்று தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் "டிசம்பர் 2023இல் நிகழ்ந்த இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள், எதிர்கால முன்னெடுப்புகள்" (Learnings from Twin Disasters of December 2023 and Way Forward) குறித்த ஒரு நாள் கருத்துப் பரிமாற்ற பணிமனையைத் தொடங்கி வைத்தார்.

✪ வீரமாமுனிவர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்...
✪ நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் மார்பளவுச் சிலை...
✪ பெரும்புலவர் கணியன் பூங்குன்றனார் அவர்களின் நினைவுத்தூண்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 23.01.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் "தமிழ் அகராதியின் தந்தை" வீரமாமுனிவரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லத்தில் மார்பளவு சிலை, பெரும்புலவர் கணியன் பூங்குன்றனார் நினைவுத்தூண் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மேலும், சுதந்திரப் போராட்ட வீராங்கனைக் குயிலி அவர்களுக்குத் திருவுருவச் சிலை, சுதந்திரப் போராட்ட வீரர்கள் "வாளுக்குவேலி அம்பலம்", வெண்ணிக் காலாடி ஆகியோருக்குத் திருவுருவச் சிலைகள், அண்ணல் காந்தியடிகள், தோழர் ஜீவா ஆகியோரின் சந்திப்பின் நினைவாகச் சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் அரங்கம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள், அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப்

பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்குத் திருவுருவச்சிலை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் அம்பேத்கர் முழு உருவ வெண்கலச்சிலை, பிதாமகர் கி.ரா. அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம், காந்தி மண்டபத்தில் வ.உ.சி. அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு அங்கு அவரது மார்பளவு சிலை, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, மருது சகோதரர்களுக்குத் திருவுருவச் சிலை, கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ. சிதம்பரனார் முழு உருவச் சிலை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை, பிரபலப் பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, அஞ்சலை அம்மாள் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, ராவ்பகதூர் குரூஸ்பர்னாந்தீஸ் அவர்களுக்கு மண்டபம், முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கு முழு உருவச் சிலை, அயோத்திதாசர் அவர்களுக்கு மண்டபம், என்று நாட்டிற்குப் பெருமை தேடித் தந்த சுதந்திரப் போராட்டத் தலைவர்கள், கவிஞர்கள், அறிஞர் பெருமக்களின் நினைவைப் போற்றி சிறப்பிக்கும் வகையில் திருவுருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வீரமாமுனிவரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் திறந்து வைத்தல்

அந்த வகையில், இத்தாலிய நாட்டைச் சேர்ந்த கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற இயற்பெயரைக் கொண்ட வீரமாமுனிவர், கிறித்தவச் சமயத் தொண்டாற்றுவதற்காக மதுரை வந்து தமது சமயப்பணிக்குத் தமிழ் மொழியறிவு மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, தமிழ் கற்கத் தொடங்கித் தமிழராகவே மாறி, தமிழ் மேதையாக உருவெடுத்தார்.

"தமிழ் அகராதியின் தந்தை" எனப்போற்றப்படும் வீரமாமுனிவர் அவர்கள், திருக்குறள் அறத்துப் பாலையும். பொருட்பாலையும் லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தது, "குட்டித் தொல்காப்பியம்" என்று புகழப்படும் தொன்னூல் விளக்கத்தைப் படைத்தது, இயேசு நாதரின் வரலாற்றைத் தேம்பாவணி எனும் காவியமாக உருவாக்கியது, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களைப் படைத்தது, என தமிழ் மொழிக்கு வீரமாமுனிவர் ஆற்றியுள்ள மாபெரும் தொண்டுகளைப் போற்றிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டி கிராமம், புனித பரலோக மாதா ஆலய வளாகத்தில் ரூ.1 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள வீரமாமுனிவரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லத்தில் மார்பளவுச் சிலை திறந்து வைத்தல்

"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" போன்ற தேசபக்திப் பாடலையும், "தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு" போன்ற வீர வரிகளுக்கு வித்திட்டவர் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள். இவர் 1932ஆம் ஆண்டு உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். தமது தேச பக்திமிக்க பேச்சினால் பல இளைஞர்களைத் தேசத்தொண்டர்களாக மாற்றினார். மலைக்கள்ளன், காணாமல் போன கல்யாணப் பெண் ஆகிய நாவல்கள், நாமக்கல் கவிஞர் பாடல்கள், பிரார்த்தனை கவிதைகள், திருக்குறள் புதிய உரை போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவை போற்றிடும் வகையில், 2023-2024ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு அரசின் முதல் அரசவைக் கவிஞர்,

தேசியப் போராட்டத் தியாகி, உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தின் வழிநடைப் பாடல் ஆசிரியர், பத்ம பூஷன் பட்டம் பெற்றவருமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நாமக்கல் நகரில் அன்னாரின் நினைவு இல்லத்தில் மார்பளவுச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, நாமக்கல் நகரில் உள்ள நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லத்தில் ரூ.20 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள அவரது மார்பளவுச் சிலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பெரும்புலவர் கணியன் பூங்குன்றனார் நினைவுத்தூண் திறந்து வைத்தல்

உலகையே தம் வாழிடமாகக் கருதிய பேரன்புப் பெருமகனார், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சொற்றொடரைப் பொற்றொடராக உலகிற்கு வழங்கிய சங்கப் பெரும்புலவர் கணியன் பூங்குன்றனார் அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மகிபாலன்பட்டியில் 276.75 சதுர அடி பரப்பளவில் ரூ.23.26 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள பெரும்புலவர் கணியன் பூங்குன்றனார் நினைவுத்தூணை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

1974ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனாரின் புகழ்பெற்ற 192ஆம் புறநானூற்றுப் பாடலான "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் பாடல் அடிகள் கல்வெட்டில் பதிக்கச் செய்து மகிபாலன்பட்டியில் திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிதாக நிறுவப்படவுள்ள 3 திருவுருவச் சிலைகள், ஒரு அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரத்தாய் குயிலித் திருவுருவச் சிலை

1750களில் மிகப் பெரிய பெண்கள் படையணியைக் கட்டி வீரச்சமர் புரிந்தவர் அரசியார் வேலுநாச்சி அவர்கள். வேலுநாச்சியாரின் வளரிப் படையும் பெண்கள் படை அணியும் ஆங்கிலேயருக்குச் சிம்மச் சொப்பனமாக இருந்தது. வேலுநாச்சியாரின் வளரிப் படைக்கு தலைமை வகித்துத் தமிழர் வீரத்தை உலகுக்குப் பறை சாற்றியவர் வீரத்தாய் குயிலி. வேலுநாச்சியாரின் வெற்றிக்காக தன் உடலில் எரிநெய்யை ஊற்றிக் கொண்டு ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்கில் குதித்தார் வீரத்தாய் குயிலி.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலி அவர்களின் தியாகத்தைப் போற்றிடும் வகையில், சிவகங்கை வட்டம், இராகினிப்பட்டியில் அமைந்துள்ள வேலுநாச்சியார் மணிமண்டபம், வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் அமைந்துள்ள வளாகத்திலேயே ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள திருவுருவச் சிலை;

சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்குவேலி அம்பலம் திருவுருவச் சிலை

வாளுக்குவேலி அம்பலம் தென் தமிழகத்தில் கி.பி.18ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்களின் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டவரும், மருது பாண்டியர்களின் உற்ற நண்பராக விளங்கிய வாளுக்கு வேலி அம்பலத்தின் போர்ப்படைகள் வெள்ளையர்களுக்கெதிரான போரில் மருதுபாண்டியர்களுக்குப் பெரிதும் உதவின.

வேலுநாச்சியார், மருது சகோதரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் சிவகங்கை வட்டம், நகரம்பட்டியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள திருவுருவச் சிலை;

சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணிக் காலாடி திருவுருவச் சிலை

மன்னர் பூலித்தேவர் படையின் முக்கியத் தளபதியாக இருந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான வெண்ணிக் காலாடியின் நினைவைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டம், நெற்கட்டும்செவல் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள திருவுருவச் சிலை;

அண்ணல் காந்தியடிகள், தோழர் ஜீவா சந்திப்பின் நினைவாக அரங்கம்

சுதந்திரப் போராட்டக் காலத்தில் அண்ணல் காந்தியடிகள், பொதுவுடைமைச் சிந்தனையாளர் தோழர் ஜீவா அவர்களுடன் சந்தித்துப் பேசிய சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் அச்சந்திப்பின் நினைவாக ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள அரங்கம்;

என மொத்தம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 3 திருவுருவச் சிலைகள், ஒரு அரங்கத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மக்கள் போற்றிய மகத்தான திட்டங்கள்

அன்று...

ஆசியாவின் மிகப்பெரிய மென்பொருள் பூங்கா “டைடல் பார்க்”

மென்பொருள் தொழில்நுட்பத்துறையில் தமிழ்நாட்டை உலக அரங்கிற்கே முன் மாதிரி மாநிலமாக விளங்கிடச் செய்யும் வகையில், ரூ.338 கோடி முதலீட்டில் மொத்தம் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 12.8 இலட்சம் சதுர அடியில் சென்னை, தரமணியில் தமிழ்நாடு அரசு, நமது வருங்காலத்தின் சின்னமாகத் திகழும் தகவல் தொழில்நுட்பத்தின் உலகத்தரம் வாய்ந்த வசதிகளைக் கொண்ட உலகிலேயே மூன்றாவது மிகப்பெரிய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா, ஆசியாவிலேயே முதலாவது மிகப்பெரிய மென்பொருள் பூங்கா **"டைடல் பார்க்"** 04.07.2000 அன்று, **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இன்று...

“கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம்”

தமிழ்ச் சமுதாயத்தின் முக்கிய பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் விழாவின்போது, தமிழ்நாடு முழுவதிலும் காளையை இளைஞர்கள் அடக்கும் வீரத்தைப் புலப்படுத்தும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்திடும் வகையில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக்கென்றே தனியான பிரம்மாண்டமான மைதானம் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் ரூ.62.78 கோடிச் செலவில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில் 77,683 சதுர அடி பரப்பளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 24.01.2024 அன்று, உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான **"கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை"** திறந்து வைத்தார்.



தமிழ்நாடு அரசின் சார்பில் குடியரசு நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில், குடியரசு நாள் விழாக் கொண்டாட்டம் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே 26.01.2024 அன்று காலை மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கியது. விழா நடைபெற்ற இடத்திற்குப் போக்குவரத்துக் காவல் படையினரின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்புடன் வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா மேடையைச் சுற்றி வந்து பார்வையாளர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதற்குப் பிறகு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து விமானப்படை வீரர்களின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்புடன் விழா மேடைக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்று முப்படைகளின் உயர் அதிகாரிகள், காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

தேசியக் கொடியேற்றம்

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார். அப்போது இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர் வானத்தில் தாழ்வாகப் பறந்து தேசியக் கொடியின் மீது மலர்தூவி மரியாதை செலுத்திச் சென்றது.

தொடர்ந்து, இராணுவப் படைப்பிரிவு, கடற்படைப்பிரிவு, இராணுவக் கூட்டுக்குழல் முரசிசைப்பிரிவு, வான்படைப்பிரிவு, கடலோரக் காவல் படைப்பிரிவு, இராணுவப் படை ஊர்தி,

கடற்படை ஊர்தி, வான்படை ஊர்தி, கடலோரக் காவல் படை ஊர்தி, முன்னாள் இராணுவத்தினர் படைப்பிரிவு, சி.ஆர்.பி.எப் படைப்பிரிவு, சி.ஆர்.பி.எப். கூட்டுக்குழல் முரசிசைப் பிரிவு, சி.ஐ.எஸ்.எப். படைப்பிரிவு, ஆர்.பி.எப். படைப்பிரிவு, தமிழ்நாடு சிறப்புக் காவல்(பெண்கள்) படைப்பிரிவு, சிறப்புப் படை கமாண்டோ படைப் பிரிவு, குதிரைப் படைப்பிரிவு, தமிழ்நாடு வனத்துறைப் படைப்பிரிவு உட்பட பல்வேறு படைப் பிரிவினர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

வீர தீரச் செயல் புரிந்தமைக்கான விருதுகள்

இதனையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வீர தீரச் செயல் புரிந்தமைக்கான அண்ணா பதக்கங்கள் உள்ளிட்ட பதக்கங்களை வழங்கினார்.

அண்ணா பதக்கம் 2024

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம், சிங்கித்துறையைச் சேர்ந்த மீனவர் திரு. யாசர் அராபத் அவர்கள், திருநெல்வேலி மாவட்டம், டவுண், தடிவீரன் கோவில் கீழத்தெருவைச் சேர்ந்த செல்வன் தே. டேனியல் செல்வசிங் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தைச் சேர்ந்த வட்டாச்சியர் திரு. சு.சிவக்குமார் அவர்கள், ஆகியோர்களுக்கு வீரதீரச் செயல்புரிந்தமைக்கான அண்ணா பதக்கம் வழங்கப்பட்டது.

கோட்டை அமீர்
மத நல்லிணக்கப் பதக்கம் 2024

மத நல்லிணக்கத்திற்காகச் சிறந்த சேவையாற்றி வரும் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை வட்டம், தளி பஞ்சாயத்து, உருது பள்ளி தெருவைச் சேர்ந்த திரு. முகமது ஜீபேர் அவர்களுக்கு இந்த ஆண்டிற்கான கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

விவசாயிக்கான வேளாண்மைத் துறையின் சிறப்பு விருது

திரு. சி.நாராயணசாமி நாயுடு
நெல் உற்பத்தித் திறனுக்கான விருது

மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, அதிக உற்பத்தித்திறன் பெறும் விவசாயிக்கான வேளாண்மைத்துறைச் சிறப்பு விருது, சேலம் மாவட்டம், பூலாம்பட்டி கிராமம், சின்னப்பில்லுக் குறிச்சியைச் சேர்ந்த திரு. சி.பாலமுருகன் அவர்களுக்கு 2023ஆம் ஆண்டிற்கான திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்திக்கான சிறப்பு விருது வழங்கப்பட்டது.

முதலமைச்சர் சிறப்பு விருது

மதுரை மாவட்டம், கிழக்கு ஒன்றியம், யா.கொடிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. உ. ஆயி அம்மாள் என்ற பூரணம் அவர்கள், மாணவர்களின் நலன் கருதி, தான் படித்த நடுநிலைப்பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த, 1 ஏக்கர் 52 சென்ட் நிலத்தினைத் தானமாக வழங்கியமைக்காகத் தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் சிறப்பு விருது வழங்கப்பட்டது.

காந்தியடிகள் காவலர் பதக்கம்

கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தியதில் மெச்சத்தக்க வகையில் பணிபுரிந்த,

விழுப்புரம் மாவட்டம், காவல் கண்காணிப்பாளர் திரு. கோ. சசாங்சாய் இ.கா.ப., அவர்கள், சென்னை மாவட்டம், மத்திய நுண்ணறிவுப் பிரிவு (தெற்கு), காவல் துணைக் கண்காணிப்பாளர், திரு. ப. காசி விஸ்வநாதன் அவர்கள், சென்னை மாவட்டம், செங்குன்றம், ஆவடிக் காவல் ஆணையரகம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, காவல் ஆய்வாளர் திரு. கா.மு.முனியசாமி அவர்கள், மதுரை மாவட்டம், மத்திய நுண்ணறிவுப் பிரிவு, காவல் உதவி ஆய்வாளர் திரு. அ.பாண்டியன் அவர்கள், இராணிப்பேட்டை மாவட்டம், அயர்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு, தலைமைக் காவலர் (318) திரு. ஜெ.ரங்கநாதன் அவர்கள், ஆகியோருக்குக் காந்தியடிகள் காவலர் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

சிறந்த காவல்நிலையத்திற்கான முதலமைச்சர் விருது

தமிழ்நாட்டில் அனைத்து மாநகரங்கள், மாவட்டங்களில் உள்ள காவல் நிலையங்களில் மிகவும் சிறப்பாகப் பணிகளைச் செய்தல், குற்றங்களைச் குறைத்தல், உடனடியாக நடவடிக்கை எடுத்தல் போன்ற செயல்பாட்டில் சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சர் விருது மதுரை மாநகரத்தைச் சேர்ந்த சி.3 - எஸ்.எஸ். காலனி காவல் நிலையத்திற்கான முதல் பரிசினைக் காவல் ஆய்வாளர் திரு. ப.பூமிநாதன் அவர்களிடமும், நாமக்கல் மாவட்டத்திற்கான இரண்டாம் பரிசினை நாமக்கல் காவல் நிலையக் காவல் ஆய்வாளர் திரு. க.சங்கர பாண்டியன் அவர்களிடமும், திருநெல்வேலி மாநகரத்தைச் சேர்ந்த, பாளையங்கோட்டைக் காவல் நிலையத்திற்கான மூன்றாம் பரிசினை, காவல் ஆய்வாளர் திரு.சே.வா.சிவம் அவர்களிடமும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பள்ளி, கல்லூரி மாணவியர்களின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள், தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் பல்வேறு துறைகளின் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கண்டுகளித்தனர். நிறைவாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்குக் குடியரசு தினவிழாவில் முதலமைச்சரின் சிறப்பு விருதுபெற்ற மதுரை திருமதி ஆயி அம்மாள் அவர்கள் ஆனந்தக் கண்ணீர் சிந்தி பெருமிதத்துடன் கூறிய நன்றி!

மதுரை கிழக்கு ஒன்றியம் யா.கொடிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி உ.ஆயி அம்மாள் என்ற பூரணம் அவர்கள் தான் படித்த யா.கொடிக்குளம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் பொருட்டுக் கட்டடங்கள் கட்டுவதற்காக 1 ஏக்கர் 52 சென்ட் நிலத்தினைத் தனது மகள் ஜனனி என்பவரின் நினைவாகத் தானமாக வழங்கியுள்ளார். இதனைப் பாராட்டி திருமதி ஆயி அம்மாள் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் சிறப்பு விருதினை மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் குடியரசு நாள் விழாவில் வழங்கினார்கள்.

விருதுபெற்ற பின் திருமதி ஆயி அம்மாள் அவர்கள் கூறியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் விருதுபெற்ற நேரத்தில், நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே கிடையாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கையாலேயே விருது வாங்கியிருப்பதை எண்ணும்போது, நன்றி சொல்ல நினைத்தபோது வார்த்தையே வரவில்லை. அழுகையாக, ஆனந்தக் கண்ணீராகத்தான் வருகிறது.

கல்வி வளர்ச்சிக்காக என்னுடைய மகளுடைய எண்ணம் நிறைவேறுவதற்காக நான் அளித்த நிலம் தொடர்பான செய்திகளும் விருதும் உலகளவில் இன்று பேசப்படுவது எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.

நான் படித்த பள்ளிக்கு நிலம் வழங்கிய செய்தியை அறிந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் தம்பி திரு. உதயநிதி அவர்கள் பொங்கல் விழாவின்போது 17.01.2024 அன்று என்னுடைய வீடுதேடி வந்து என்னைப் பாராட்டியது அதிர்ச்சியாகவும் எனக்கு ஆனந்தமாகவும் இருந்தது.

இந்த நேரத்தில் என்னுடைய பெற்றோரை, என் கணவரை, என் மகளை நினைத்து ஆனந்தம் அடைகிறேன்.

எனக்கு விருது வழங்குவதற்கு முன்னதாக திருநெல்வேலியைச் சேர்ந்த இளைய தலைமுறையைச் சேர்ந்த ஒரு தம்பிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விருது வழங்கினார்கள்.

கடந்த டிசம்பரில் 18, 19 ஆகிய நாட்களில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தின்போது தன்னலம் கருதாமல் துணிச்சலோடு தன் உயிரையும் துச்சமென நினைத்து மீட்புப் பணிகளில் ஈடுபட்ட துணிச்சலான செயலைப் பாராட்டிச் செல்வன் தே.டேனியல் செல்வசிங் அவர்களுக்கு வீரதீரச் செயலுக்கான விருதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அந்தக் காட்சியும் எனக்கு ஆனந்தத்தையும் பெருமிதத்தையும் அளித்தது. அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சந்தோசத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியபோது திருமதி ஆயி அம்மாள் அவர்கள் ஓர் உணர்ச்சிப் பிழம்பாகக் காட்சியளித்தது அனைவரையும் நெகிழச் செய்தது.

கேரள அரசின் நடவடிக்கைகளுக்குத் தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பினை அளிக்கும்

மாண்புமிகு கேரள முதலமைச்சர்
திரு. **பினராயி விஜயன்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
கடிதம் - 06.02.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களுக்கு 06.02.2024 அன்று எழுதியுள்ள கடிதத்தில், மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் தன்னிச்சையான, பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி, மாநிலங்களின் குரல்வளையை நெரிக்க ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்த்து, மாண்பமை உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளதோடு, இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு தனது முழு ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், ஒன்றிய அரசு சில காலமாகவே மாநில அரசுகளுக்கு எதிராக இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், கடந்த சில ஆண்டுகளில் நிலைமை வேகமாக மோசமடைந்துள்ளது என்றும், மாநிலங்களின் நிதி நிருவாகத்தில் இத்தகைய மறைமுகக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் முற்போக்கான மாநிலங்களிடையே தெளிவான, ஒருமித்த கருத்து உருவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநிலச் சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றும், இருப்பினும், மாநிலங்கள் கடன் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293ஆவது பிரிவின்கீழ்த் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரிவின்படி, ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஷரத்து, மாநில அரசின் நிதிப் பொறுப்பு, மற்றும் வரவு-செலவு மேலாண்மை விதிகளின்படி வரையறுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை நேர் செய்யும் மாநில அரசின் முனைப்புகளைத் தடுக்கும் கருவியாக ஒன்றிய அரசால் மாற்றப்பட்டுள்ளதாகவும், இதன் விளைவாக அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் கருதிய நிதிக் கூட்டாட்சியின் அடிப்படைக்கே மாபெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும் தனது கடிதத்தில் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஒன்றிய அரசின் இத்தகைய நடவடிக்கைகள், மாநில அரசின் முன்முயற்சிகளுக்கு நிதி திரட்டுவதில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் புள்ளி விவரங்களுடன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

முதலாவதாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023–2024ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது என்றும், இதனால், நடப்பாண்டில், ரூ.6,000 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவதாக, மின் துறை சீரமைப்புகளுக்காகக் கூடுதல் கடன் பெறுவதற்கான வழிகாட்டி

நெறிமுறைகளின்படி, மாநில மின் விநியோக நிறுவனங்களின் (DISCOMs) மொத்த இழப்புக்கு நிதியளிக்க வேண்டும் என்ற கட்டாய நிபந்தனையால், நடப்பாண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகத்திற்கு ரூ.17,111 கோடி வழங்க வேண்டிய கட்டாயத்திற்குத் தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டுள்ளது என்றும், இது இந்த ஆண்டு மாநிலத்தின் நிதி வாய்ப்புகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்றும், எதிர்காலத்திலும் மாநிலங்களைப் பாதிக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூன்றாவதாக, ஒன்றிய அரசின் திட்டமான, சென்னை மெட்ரோ இரயில் 2ஆம் கட்டத் திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்ததால், இத்திட்டத்திற்கான மொத்த கடனான ரூ.33,594 கோடி முழுவதும், மாநிலத்தின் நிகரக் கடன் உச்சவரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே ஜி.எஸ்.டி. அமலாக்கத்தின் மூலம் மாநிலங்களின் நிதித் தன்னாட்சிக் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ள நேரத்தில். இத்தகைய பாரபட்சமான, அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு முன்னெடுத்து வருகிறது என்று தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சரக்குகள், சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு ரூ.20,000 கோடி வருவாய்ப் பற்றாக்குறையைத் தமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது என்றும், இழப்பீட்டுத் திட்டத்தை நீட்டிக்க ஒன்றிய அரசு மறுத்து வருகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். மாநிலங்களின் கொள்கை முன்னுரிமைகளின்படி வளங்களைத் திரட்டுவதற்கும், முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் உள்ள திறனை முடக்குவதையே ஒன்றிய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒருமித்த கருத்துடைய முற்போக்கான மாநில அரசுகள் இதனை எதிர்க்க வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிதிக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதில் கேரள அரசின் உறுதிப்பாட்டை தான் முழுமையாக ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு தனது முழு ஒத்துழைப்பைக் கேரள அரசுக்கு வழங்கத் தயாராக உள்ளது என்றும், இந்த முக்கியமான சவாலை எதிர்கொள்ள கேரள அரசின் நடவடிக்கைகளோடு, தமிழ்நாடு அரசின் முயற்சிகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் தனது கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

படமும்/செய்தியும்

புதிய மின்னணு சுவர் திரை திறப்பு விழா

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் பேருந்து நிலையத்தில், 29.01.2024 அன்று செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், தமிழ்நாடு அரசின் திட்டங்கள், அறிவிப்புகளைப் பொதுமக்கள் அறியும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்னணு சுவர் திரையினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

சென்னையில்
48ஆவது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சி

சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48ஆவது இந்தியச் சுற்றுலா, பொருட்காட்சியின் தொடக்க விழா, தீவுத்திடல் அறிஞர் அண்ணா கலையரங்கில் 12.01.2024 அன்று சிறப்புடன் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 48ஆவது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார். மேலும் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கங்களைப் பார்வையிட்டார்.

48ஆவது இந்திய சுற்றுலா, தொழில் பொருட்காட்சி 2023-2024ஐ யொட்டி, சுற்றுலாவும், பசுமை முதலீடுகளும் என்ற இந்தாண்டிற்கான கருப்பொருளை மையமாகக் கொண்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நான் முதல்வன் திட்டம், காவல்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை, தொழில், முதலீடு மற்றும் வர்த்தகத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, பள்ளிகல்வித் துறை, உயர்கல்வித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பட்டு வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, சி.எம்.டி.எ, ஆவின், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை மாநகராட்சி உள்பட தமிழ்நாடு அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்களின் அரங்கங்கள் - 49, ஒன்றிய அரசு நிறுவனங்களின் 2 அரங்கங்கள், என மொத்தம் - 51 அரங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார் - 12.01.2024

இந்து சமய அறநிலையத்துறை அரங்கில் சென்னை, அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள பிரசித்திப்பெற்ற திருக்கோயில்களிலிருந்து பிரசாதங்கள் வருவிக்கப்பட்டு, பொருட்காட்சிக்கு வருகைதரும்பார்வையாளர்களுக்குதினந்தோறும் வழங்கப்பட்டன.

மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அரங்கில் முழு உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, இதய வரைவலை பரிசோதனைகள் உள்பட பல்வேறு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மகிழ்ச்சியடைகின்றேன். இங்கு வந்ததில் எனக்குப் பழைய நினைவுகள் வருகின்றன. நான் பள்ளியில் படிக்கும்போது, 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு எப்போதெல்லாம் சுற்றுலா பொருட்காட்சி நடைபெறுமோ அப்போதெல்லாம், என்னுடைய சகோதரிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த குடும்பத்தாருடன் பலமுறை வந்து இந்த பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டு செல்வது வழக்கம். இப்போது அதே பொருட்காட்சியைத் திறந்து வைப்பதற்கான வாய்ப்புக் கிடைத்திருப்பது பெருமையாக உள்ளது.

நான் பொறுப்பு வகிக்கக் கூடிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரங்கமும் இந்தப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியாகும். என்னுடைய துறையின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கக் கூடிய பல்வேறு பணிகள், நிகழ்ச்சிகள், பல்வேறு முன்னெடுப்புகள் குறித்த விளக்கங்கள் அந்த அரங்கத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்துத் துறைகளின் சார்பில் இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று ஒவ்வொரு அரங்கத்திலேயும் சிறப்பாக விளக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள், பத்திரிக்கை நண்பர்களெல்லாம், கண்காட்சி அரங்கங்களைப் பார்வையிட்டு அனைத்துப் பொதுமக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பொருட்காட்சியை திறக்கின்ற வாய்ப்புக் கிடைத்தும் என்னால் வரமுடியவில்லை. அடுத்த 70 நாட்கள் இந்தப் பொருட்காட்சி நடைபெற இருக்கின்றது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த பொருட்காட்சியைப் பார்வையிட்டு, அரசு திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு, பொருட்காட்சியின் நோக்கத்தை வெற்றியாக்கிக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

ரிசர்வ் வங்கி அரங்கில் பழைய கிழிந்த ரூபாய் நோட்டுகள் மாற்றி புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கவும், சில்லரை நாணயங்கள், புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இவை தவிர தனியார் கடைகள், அரங்கங்கள் அமைக்கப்பட்டுப் பொருட்காட்சி நடைபெறுவதன் மூலம் நேரடியாகச் சுமார் 5,000 பேரும், மறைமுகமாக சுமார் 30,000 நபர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது.

80,000 சதுர அடி பரப்பளவில் பொழுதுபோக்கு வளாகம் அமைந்துள்ளது. பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காகச் சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாகச் சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 12 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கண்டுகளித்தனர்.

48ஆவது இந்திய சுற்றுலா, பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை :

48ஆவது இந்திய சுற்றுலா, தொழில் பொருட்கட்சியைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த

ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களை தொழில்முனைவோர்களாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவரும் அரசு

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை – 26.01.2024

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் தொழில்முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி, கருத்தரங்கத்தை (TN BEAT EXPO-2024) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 26.01.2024 அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர், பழங்குடியின நலத்துறை சார்பாக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) தென்னிந்திய வரலாற்றில் முதல்முறையாகத் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில்முனைவோருக்கான கண்காட்சி, கருத்தரங்கத்தினைச் (TN BEAT EXPO2024-) சென்னை வர்த்தக மையத்தில் தொடங்கி வைப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேன்மைப்படுத்திட ஏதுவாக இவ்வரசு முதலமைச்சரின் ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில்முனைவுத் திட்டம், சுயஉதவிக்கான பொருளாதாரக் கடனுதவித் திட்டம், துரித மின்இணைப்பு திட்டம் நிலம் வாங்கும் திட்டம், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் திட்ட உதவிகள், கல்விக்கடன் திட்டம், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலம் தொழில் தொடங்குவதற்கான மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மூலமாக ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களைத் தொழில்முனைவோர்களாக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இக்கண்காட்சியில் ஆதிதிராவிடர், பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8,000க்கும் மேற்பட்ட பொருட்களானது 410 அரங்குகளிலும், வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரிபாகங்கள், இரசாயனப் பொருட்கள், மின், மின்னணுவியல், வேளாண்மைக் கருவிகள், கட்டுமானத் தொழில் சார்ந்த உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் என 187 அரங்குகள், அரசுப் பொதுத்துறையைச் சார்ந்த பூம்புகார் நிறுவனம், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிட்டேட், சிறுதொழில் வளர்ச்சிக்கழகம், ஆவின் போன்ற 28 அரங்குகள் மேலும், தேசியமயமாக்கப்பட்ட, தனியார் வங்கிகள் மூலம் 10 அரங்குகள் பொதுமக்களின் பார்வைக்காக அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், வணிகர்கள், வாடிக்கையாளர்களுக்கு இடையே நேரடி விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து தொழில்முனைவோர் முதலீட்டாளர்கள், தொழில் அதிபர்கள், சுயதொழில் செய்பவர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள், தொழில்துறையைச் சார்ந்த மாணவர்களையும் இந்நேரத்தில் பாராட்டுகிறேன்.

இக்கண்காட்சியினால் ஆதிதிராவிடர், பழங்குடியினத் தொழில்முனைவோர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை கண்காட்சியில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும், ஒன்றியம், மாநில அரசுப் பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் முன்னணி நிறுவனங்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை நேரடி கொள்முதல் செய்வதற்கான வாய்ப்புகளையும், தொழில்முனைவோர் புதிய தொழில் துவங்குவதற்கும் மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறவும், குறு, சிறு தொழிலாளர்கள் தயாரிக்கும் உற்பத்திப் பொருட்களை வெளிமாநிலம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் தொழில்துறையில் சிறந்து விளங்கும் சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கமும் நடைபெற்றது.

பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன்முதலாகச் செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மொழித் தொழில்நுட்பத்துக்காக மாநாடு நடத்துவது தமிழ்நாடு அரசுதான்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் வாழ்த்துச் செய்தியினை, பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டு நிறைவு விழாவில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல், டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் வாசித்தார் - 10.02.2024

ஓலைச்சுவடிக் காலத்திலிருந்து இன்றைய ஆண்ட்ராய்டு காலம் வரையிலும் அனைத்திலும் கோலோச்சி வரும் மொழியாக நமது அன்னைத் தமிழ் மொழி இருப்பது நமக்கெல்லாம் பெருமை. முன்னைப் பழமைக்கும் பழமையாய் - பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நம் தமிழ்மொழி இருப்பதைவிட நமக்கு வேறு பெருமை வேண்டுமா?

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தமிழ்மொழியின் நிலையைக் குறித்து ஆராயவும் விவாதிக்கவும், புதிய சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளவும், இளம் திறமையாளர்களை அடையாளம் காணவும், 'பன்னாட்டுக் கணித்தமிழ் - 24' என்கிற மாநாடு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பில் பிப்ரவரி 8,9,10 ஆகிய நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய தமிழை, கணினிக் காலத்தில் மட்டுமல்ல, அடுத்து வரும் எந்தக் காலத்துக்கும் நிலைநிறுத்தும் முயற்சியே இந்த மாநாடு ஆகும். பழம்பெருமை பேசிக் கொண்டு மட்டுமே இருப்பவர்கள் அல்ல நாம்; பழம்பெருமையைத் தக்க வைத்துக் கொள்ளவும் எந்நாளும் சிந்தித்துக் கொண்டு இருப்பவர்கள் நாம்.

இணையப் பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாம் இடத்தில் இருக்கிறது. அதில் மாநிலவாரியாகப் பார்த்தால் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக ஐ.ஏ.எம். ஏ.ஐ. என்ற தொலைத்தொடர்பு ஆய்வகத்தின் அறிக்கை கூறுகிறது.

பன்னாட்டுக் கணித்தமிழ் - 24 என்ற இந்த மாநாடு, 'தமிழ் நெட் - 99' என்ற மாநாட்டை நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் நடைபெறுவது மிகமிகச் சிறப்பானதாகும்.

❖ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1997ஆம் ஆண்டே தகவல் தொழில்நுட்பக்

கொள்கையை முதன்முதலில் தமிழ்நாட்டிற்கு வகுத்துக் கொடுத்தார் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

- அரசுப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புற, ஏழை - எளிய மாணவர்கள் கணினி எனும் இயந்திரத்தையே நேரில் பார்த்திராத காலகட்டத்தில், அவர்களுக்குக் கணினிக்கல்வி தந்தார்.
- 1999-2000ஆம் ஆண்டே, பள்ளிப் பாடத்திட்டத்தில் மட்டுமன்றி, கலை, அறிவியல், மருத்துவம், சட்டம் உள்ளிட்ட கல்விப் பாடத்திட்டங்களிலும் கணினிப் பாடத்தை அவர் கொண்டுவந்தார்.
- 1996-2001 ஆட்சிக் காலத்திலேயே 'Empower IT' என்ற நிகழ்ச்சியை ஆண்டுதோறும் நடத்தி, தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தைப் பட்டிதொட்டிகள் எல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு சென்றார்.
- அப்போதே Mobile Governance, e-Governance போன்றவை அரசு அலுவலகங்களில் - அரசு சேவைகளில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.
- தமிழ்நாட்டில் IT Professionals ஏராளமாக உருவாகக் காரணமாக இருந்தார்.
- தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தேடி வந்து தேர்வு செய்யக்கூடிய முதல் நகரமாகச் சென்னையை மாற்றிக் காட்டினார்.
- தகவல் தொழில்நுட்பத்துக்கு எனத் தனித் துறையையும் 1998ஆம் ஆண்டிலேயே உருவாக்கி, அதற்குத் தனி அமைச்சரையும் நியமித்தார்.
- கணினி என்ற பெயர் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் எல்லோரையும் சென்றடைவதற்கு முன்னதாகவே, டைடல் பூங்காவைத் தமிழ்நாட்டில் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். 1997இல் தரமணியில் டைடல் பூங்காவை உருவாக்கிட அதற்கெனப் புதுக் கொள்கையினை உருவாக்கி, ஆசியாவிலேயே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பக் கட்டடமாக அதனைக் கட்டி, 2000ஆம் ஆண்டில் அதனைத் திறந்து வைத்து, தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்த்தார் அவர். மற்ற மாநிலங்களைவிடத் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு முன்னேறி இருக்கக் காரணம் தலைவர் கலைஞர் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

1996ஆம் ஆண்டு முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள் இருந்தபோது தொடங்கிய தகவல் தொழில்நுட்பப் புரட்சிதான் கடந்த 30 ஆண்டுகள் அத்துறை மகத்தான வளர்ச்சியைப் பெறுவதற்குக் காரணமாகும். உலகம் முழுக்க தமிழ்நாட்டு இளைஞர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால் அதற்குக் கலைஞர் அவர்கள்தான் அடித்தளம் அமைத்தார்கள்.

1999ஆம் ஆண்டு Tamilnet-99 என்ற மாநாட்டின் மூலமாகத்தான் 'தமிழ் 99 விசைப்பலகை' உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அரசால் அது அங்கீகரிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது. இன்றைக்கு அனைத்துத் தொழில் நுட்ப வடிவங்களிலும் தமிழைப் பயன்படுத்துகிறோம் என்றால் அதற்கு விதை போட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதன்பின் 05.07.2000 அன்று தமிழ் இணையக் கல்விக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக அரசின், தலைவர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வைக்கு எடுத்துக்காட்டு, கணினித் துறையை அவர் கையாண்ட விதம் ஆகும். அதே வழியில்தான் எனது தலைமையிலான 'திராவிட மாடல்' அரசும் செயல்பட்டு வருகிறது. பன்னாட்டுக் கணித்தமிழ் - 24 என்ற மாநாட்டையும் இதே தொலைநோக்குப் பார்வையுடன் தான் நடத்துகிறோம்.

ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுவரும் இயற்கை மொழி ஆய்வு (Natural Language Processing Tools) (NLPT), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரவழிக் கற்றல் (Machine Learning), இயந்திர மொழியாக்கம் (Machine Translation) (MT), மெய்ப்பாட்டுப் பகுப்பாய்வு (Sentimental Analysis) (SA), பெருந்தரவக மாதிரி (Large Language Model) (LLM), தானியக்கப் பேச்சுரை (Automatic Speech Recognition) (ASR) போன்றவற்றைத் தமிழில் உருவாக்கும் முயற்சியாக இந்த மாநாடு நடைபெற்றுள்ளது.

ஒவ்வொரு நாளும் தொழில்நுட்பம் வளர்ந்து வருகிறது. தொழில்நுட்பத்தில் மொழியின் முக்கியத்துவம் அதிகரித்தும் வருகிறது. எந்த விதமான தொழில்நுட்பம் வந்தாலும் அவை அனைத்திலும் தமிழ் வாழ வேண்டும், ஆள வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கமாகும். மொழி வாழ்ந்தால் இனம் வாழும். மொழி தாழ்ந்தால் இனம் தாழும். 'தமிழை வளர்த்துத் தமிழனை உயர்த்துவோம்' என்பதுதான் எமது அரசின் நோக்கம்!

எப்போது தோன்றியது என்று கண்டறியப்பட முடியாத தமிழ்மொழியை, எப்போதும் சிறப்புற வைக்க இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு

24 அடித்தளம் அமைக்கும் என்பதில் துளியளவும் அய்யமில்லை. செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மொழித் தொழில் நுட்பத்துக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக மாநாடு நடத்துவது தமிழ்நாடு அரசுதான் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் மொழிக்காக முன்னெடுக்காத பெருந்திட்டம் இந்த மாநாடு. மொழி காக்க உயிரையே கொடுத்தவர்கள் தமிழர்கள் என்பதும் நமது வரலாறுதான்!

செயற்கை நுண்ணறிவு (AI), அதிகளவில் மொழி மாதிரிகளை உருவாக்குதல் (LLM), பல்நுட்ப (டிஜிட்டல்) உள்ளடக்க உருவாக்கம், கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பம், மின் ஆளுமை ஆகிய தளங்களில் இம்மாநாடு நடைபெற்றுள்ளது.

2023-2024ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்க் கணினிப் பன்னாட்டு மாநாடு நடைபெறும் என்பதை அறிவித்தோம்.

2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் என்று கடந்த அக்டோபர் மாதம் நான் அறிவிப்பை வெளியிட்டேன்.

பத்து நாடுகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் வருகை தந்துள்ளார்கள். முப்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கெடுத்துள்ளன. நாற்பது காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஐம்பதுக்கும் மேற்பட்ட அமர்வுகள் நடைபெறுகின்றன. இவை அனைத்தும் தமிழுக்காக நடைபெறுகின்றன என்பதே சிறப்பு!

செயற்கை நுண்ணறிவு, இயந்திரவழிக் கற்றல், இயற்கைமொழிச் செயலாக்கம், நவீன மொழித் தொழில்நுட்பங்கள் ஆகிய பல்வேறுத் தலைப்புகளில் ஆய்வுகள் நடந்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் இணையக் கல்விக் கழகம் ஆற்றிவரும் தொண்டு என்பது எதிர்காலத் தமிழ்த் தொண்டாகும். இதற்குக் காரணமான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்களைப் பாராட்டுகிறேன். வருங்காலத் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்க இருப்பதோடு, பல்லாயிரம் இளைஞர்களின் வேலை வாய்ப்புகளுக்கும் அடிப்படையாய் விளங்கும் இத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றது முதலே ஆக்கப்பூர்வமான பணிகளை அவர் ஆற்றி வருகிறார். உலக அளவிலான தம்முடைய அனுபவங்களால் இத்துறையின் வளர்ச்சிக்காக அவர் எடுத்து வரும் நடவடிக்கைகள், நடத்தி வரும் மாநாடுகள் அவர் செயல்திறனைப் பறைசாற்றுகின்றன. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் தலைவராகவும், அரசின் முதன்மைச் செயலாளராகவும் இருக்கும் திரு. த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும் இம்மாநாட்டின் ஒருங்கிணைப்புக்காக எனது பாராட்டுகள்.

தமிழ்நாடு அரசின் அழைப்பை ஏற்று - உலகம் முழுவதும் இருந்து வருகை தந்துள்ள தகவல் தொழில்நுட்ப அறிஞர்கள், வல்லுநர்கள் அனைவர்க்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

செயற்கை நுண்ணறிவுப் பாதையில் தமிழ்மொழியை வெற்றிகரமாகப் பயணிக்க வைக்க வேண்டும். தொழில்நுட்பங்களுக்கு ஏற்பத் தமிழ்மொழி, தகவமைக்கப்பட வேண்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளைப் போல தமிழில் தொழில்நுட்பச் சேவைகள் அனைத்தும் கிடைக்கத் தமிழ்நாடு அரசும் ஆவன செய்யும். உலகளாவிய நிறுவனங்கள் வெளியிடும் மென்பொருட்கள் மற்ற மொழிகளில் வெளியாகி, தமிழுக்குக் காலதாமதமாக வருகிறது. இந்த இடைவெளியைக் குறைத்தாக வேண்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கு மென்பொருட்கள் வரும்போதே தமிழுக்கும் வந்தாக வேண்டும்.

அத்தகைய பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தமிழ்மொழி சார்ந்த வளத்தையும் வழிகாட்டுதல்களையும் தமிழ்நாடு அரசு வழங்கும்.

இளைய தலைமுறையினர் அனைத்துத் தகவல் தொழில்நுட்பங்களிலும் தமிழை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறுஞ்செய்தி முதல் அனைத்துத் தொடர்புகளையும் முடிந்த வரை தமிழில் கையாண்டால் தலைமுறைகள் தாண்டியும் தமிழ் வாழும். தமிழ்நாட்டு தமிழர்களும், தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து உலகின் பல நாடுகளில் வாழ்பவர்களும் இணைய வழியாகத் தமிழ்ப் பாடங்களைப் படிக்க வேண்டும். தமிழ் ஆர்வத்தை, தமிழ் அறிவாக அனைவரும் மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்கள், தமிழ்மொழி கற்பிப்பு, ஆய்வுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது. அதனை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தொல்லியலையும் தொழில்நுட்பத்தையும் ஒருசேரப் பற்றி நிற்போம்!

துறைதோறும் துறைதோறும் தமிழ்த் தொண்டு ஆற்றுவோம்!

தமிழைப் புத்தொளி பெற வைப்போம்!

வெற்றிக்கதை

கோயம்புத்தூர் மாவட்டம்

ஏழைகளுக்கு விரைவில் நலத்திட்ட உதவிகள் கிடைக்கும் "மக்களுடன் முதல்வர்" திட்டம்

அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தைக் கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், 18.12.2023 அன்று தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, மனுக்களைப் பதிவு செய்யும் சிறப்பு முகாமினைப் பார்வையிட்டு, பதிவு செய்ய வந்த மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார்.

அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், பொதுமக்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவும், அரசின் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திடவும், "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்", "கள ஆய்வில் முதலமைச்சர்" போன்ற திட்டங்களையும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், பெண்களுக்கான விடியல் பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், இன்னுயிர்க் காப்போம் - நம்மை காக்கும் 48 போன்ற முன்னோடித் திட்டங்களையும் இவ்வரசு அறிவித்து சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "மக்களுடன் முதல்வர்" என்ற இப்புதிய திட்டத்தின்கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிருவாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுக் கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்றுத் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு, கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களைத் தவிர்த்திட வேண்டும் என்பதும்தான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக வரும் 18.12.2023ஆம் தேதி முதல் 06.01.2024 வரை அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் 1,745 முகாம்கள் நடத்தப்படும். முகாம்களில் பெறப்படுகின்ற மனுக்கள் எல்லாம், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 நாட்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

திருமதி மங்கையர்க்கரசி

'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின்கீழ் இலவச தையல் இயந்திரம் வேண்டி விண்ணப்பித்த கோயம்புத்தூர் மாவட்டம், இராமநாதபுரத்தைச் சேர்ந்த திருமதி மங்கையர்கரசி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

என் பெயர் மங்கையர்க்கரசி. நான் இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். என் கணவருக்குக் கண்ணில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக அறுவை சிகிச்சையில் ஒரு கண்ணை முழுமையாக எடுக்கப்பட்டுவிட்டது. எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அதனால் அவரால் எந்த வேலையும் செய்யமுடியாது. நான் சில வீடுகளில் வீட்டு வேலை செய்து வருகிறேன். அதில் கிடைக்கும் குறைந்த வருமானத்தில்தான் குடும்பச் செலவுகளை கவனித்துக் கொள்கிறோம். வீட்டில் இருந்து என் கணவரையும் குழந்தைகளையும் சரியாகக் கவனிக்க முடியவில்லை. எனவே, தையல் பயிற்சி பெற்று தையல் தொழில் செய்யலாம் என்று தையல் தொழில் கற்றுக்கொண்டேன். ஆனால் தையல் இயந்திரம் வாங்கும் அளவுக்கு என்னிடம் பொருளாதார வசதி இல்லை.

இந்நிலையில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின்கீழ் எங்கள் பகுதியில் முகாம் நடைபெற்றது. இம்முகாம் குறித்து அறிந்து அங்குச் சென்று அரசு அலுவலர்களிடம் விவரம் கேட்டேன். அதனைத்தொடர்ந்து, அம்முகாமில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின்கீழ், இலவசத் தையல் இயந்திரம் பெற விண்ணப்பித்தேன். விரைவில் எனக்கு இலவச தையல் இயந்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அலுவலர்கள் தெரிவித்தனர். என்னைப்போன்ற ஏழைகளுக்கு உதவும் வகையிலும், விரைவில் நலத்திட்ட உதவிகள் கிடைக்கும் வகையிலும் இத்திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

திரு. பேரிங் பாபு

'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின்கீழ், பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்த கோயம்புத்தூர் மாவட்டம், மரக்கடை பகுதியைச் சேர்ந்த என். பேரிங்பாபு அவர்கள் நம்மிடம் கூறும்போது,

என் பெயர் பேரிங்பாபு. நான் மரக்கடையில் வசித்துவருகிறேன். நான் ஆட்டோ மொபைல் கடை வைத்து இருக்கிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனக்குச் சொந்த கட்டடம் உள்ளது. முகம்மது அலி என்பவரின் பெயரில் இடத்தில் பட்டா இருக்கிறது. அதனை என் பெயரில் மாற்றவேண்டி ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின் கீழ், எங்கள் பகுதியில் நடைபெற்ற முகாமில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளேன்.

விரைவில் பட்டா மாறுதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அலுவலர்கள் தெரிவித்தனர். அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

தொகுப்பு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

சிறுகதை

வெண்புரவி

சாரு நிவேதிதா

சித்தார்த்தன் பிறந்த போதே அஸிதர் கூறி விட்டார், இளவரசர் பேரரசராகி உலகை ஆள்வார் அல்லது உலகுக்கே பேராசானாகத் திகழ்வார் என்று. அஸிதரின் பேச்சுக்கு அங்கே மறுபேச்சு கிடையாது. அஸிதர் சுத்தோதனரின் தந்தைக்கே குருவாக இருந்தவர். இப்போது சுத்தோதனருக்கும் குருவாக இருக்கிறார். கணிப்பைச் சொன்னதோடு மட்டுமல்லாமல் அரசன் தனியாக இருக்கும்போது கண் கலங்கவும் செய்தார் அஸிதர். சித்தார்த்தன் துறவியாவதில் தன்னைப் போலவே அஸிதருக்கும் துக்கம் உண்டோ எனச் சந்தேகமுற்ற சுத்தோதனன் ஆசானிடம் அதைக் கேட்டான். அதற்கு அஸிதர், "காலையில் நீ மந்திரிகள் சூழ இருந்ததால் கொஞ்சம் மூடி மறைத்துத்தான் சொல்ல முடிந்தது, இப்போது தெளிவாகச் சொல்கிறேன், சித்தார்த்தன் பேராசான் ஆவது உறுதி, நான் துக்கித்தது எதற்கென்றால், சித்தார்த்தன் கண்ட ஞானத்தை உலகம் கேட்கின்ற நேரத்தில் என்னால் கேட்க முடியாது, அப்போது நான் அரூப உலகில் இருப்பேன்" என்றார்.

அஸிதரின் ஆரூடத்தைக் கேட்டது முதற்கொண்டு சாக்கிய மன்னன் சுத்தோதனன் தன் புதல்வனை வாழ்வின் எந்தவொரு இருண்ட பகுதியும் அவன் கண்களில் படாமலேயே வளர்த்து வந்தான். ஆனால் சித்தார்த்தனனின் நித்திரையில் தோன்றும் கனவின் காட்சிகளைச் சுத்தோதனனால் தடை செய்ய முடியவில்லை.

சித்தார்த்தனை அந்தக் கனவுகள் சித்ரவதை செய்து கொண்டிருந்தன. அக்கனவுகளால் அவனுக்குள் ஏற்படும் வேதனை சொல்லி மாளாதது. இதுபற்றி அவனால் யாரிடமும் கேட்க முடியவில்லை. உள்ளுக்குள்ளேயே புழுங்கினான். உதாரணமாக இப்படி ஒரு கனவு: பூமியின் அடி ஆழத்தில் மனிதர்கள் எதையோ தோண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எலும்புக் கூடுகளைப்போல் இருந்தார்கள். அதில் சில உருவங்களை சிறார்கள் என்று புரிந்துகொள்ள முடிந்தது. பூமியின் சுவர்களிலிருந்து அவர்கள் எதையோ சுரண்டிச் சுரண்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். கரிபோல் இருண்டிருந்த அந்த இடத்தில் ஒரு சிறுவனின் கையிலிருந்த சிறிய விளக்கிலிருந்து மிக மெலிதான வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது. அப்போது அந்தக் குழியின் மேலேயிருந்த தளம் அதைத் தாங்கிக் கொண்டிருந்த தூண் ஒன்று சரிந்து விட்டது போன்ற பெரும் சப்தத்துடன் கீழே விழுந்ததில் சிறுவனும் அவன் அருகில் நின்று கொண்டிருந்த இரண்டு உருவங்களும் சரிவுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டார்கள். கரிய பாறைத் துண்டுகளும் மண்ணும் சேறும் கலந்த அந்தக் குவியலிலிருந்து உடல்களை வெளியேற்றுவது அத்தனைச் சுலபமாக இல்லை. சித்தார்த்தன் இதைத் தனது தூலக் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. விதிர்விதிர்த்து உறக்கத்திலிருந்து எழுந்தபோது அரண்மனையின் மலர் மஞ்சத்தில் கிடப்பதை உணர்ந்தான்.

இதுபோல் நூற்றுக்கணக்கான கனவுகள். இன்னொரு கனவில் குட்டம் பிடித்துத்

தசையெல்லாம் அழுகிச் சீழ் வடிந்து கொண்டிருந்த ஒரு முதியவனைப் பார்த்தான். முகத்தில் மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு துவாரங்கள் மட்டுமே தென்பட்டன. அந்த துவாரங்களில் மொய்த்துக் கொண்டிருந்த ஈக்களை விரல்கள் இல்லாமல் வெறும் குச்சி போல் துருத்திக் கொண்டிருந்த தன் கைகளால் விரட்ட முயற்சி செய்து கொண்டிருந்தான் ரோகி. அவன் விரட்ட விரட்ட மீண்டும் மீண்டும் ஈக்கள் அந்தப் பொந்துகளை வட்டமிட்டன.

சகிக்கவே முடியாத அந்தக் காட்சியை அதற்கு மேலும் காண்பதற்குத் துணிவு இல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டதோடு சித்தார்த்தனின் அந்தக் கனவு முடிவுக்கு வந்தது. சித்தார்த்தனின் பிரச்சினை என்னவென்றால், இது போன்ற கனவுகள் அவனுக்குத் திரும்பத் திரும்ப வந்து கொண்டேயிருந்ததுதான்.

ஒரு கனவில் இரண்டு வயதுக் குழந்தைக்கு ஒரு தாய் அன்னமூட்டிக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்தில் அந்தக் குழந்தைக்குப் புரையேறி மூச்சு விட முடியாமல் தவித்துக் கண்ணிமைக்கும் நேரத்தில் தலை தொங்கி விட்டது. அந்தத் தாய் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு விழுந்து புரண்டு அழுதாள்.

இன்னொரு கனவில் ஒரு போர்க்களக் காட்சி. யானைகளும் குதிரைகளும் மனிதர்களும் குற்றுயிராகவும் பிரேதமாகவும் ரத்தச் சகதியில் கிடந்தார்கள். தலைகீழாய்க் கவிழ்ந்து கிடந்த தேரின் உச்சியிலிருந்து ஒரு பிரேதம் கையில் வாளோடு தொங்கிக் கொண்டிருந்தது. சிரசற்ற ஒரு மனிதனின் தலைப்பகுதியில் ஒரு குதிரையின் தலை கிடந்தது. ஆயிரக்கணக்கில் விரவிக் கிடந்த உடல்களைக் கழுகுகளும் பருந்துகளும் தின்று கொண்டிருந்தன.

உடல் நடுங்க உறக்கத்திலிருந்து எழுந்தான் சித்தார்த்தன்.

தந்தைக்குத் தெரியாமல் ஒரு கணிகனிடம் இந்தக் கொடுங்கனாக்கள் குறித்துச் சொன்னபோது கணிகன் சித்தார்த்தனுக்குச் சில தியான முறைகளை விளக்கினான். எல்லாம் பரம இரகசியமாக நடந்தன. அரசனுக்குத் தெரிந்தால் கெடுபிடிகள் இன்னும் அதிகமாகி விடும். ஏற்கெனவே

அஸிதரின் கணிப்பினால்தான் சித்தார்த்தன் இப்படி அரண்மனைக் கைதியாய்ச் சிறைப்பட்டிருக்கிறான்.

கணிகன் கற்பித்த தியானத்தின் மூலம் சித்தார்த்தனுக்குச் சில விஷயங்கள் புரிந்தன. இந்த உலகின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன, அதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வது எப்படி எனக் கண்டு பிடிக்க வேண்டும். அதற்கு அடிப்படையான முதல் செயல், இந்த அரண்மனை வாழ்வையும், இராஜபோகங்களையும், மனைவியையும் மகனையும் துறக்க வேண்டும்.

அதெல்லாம் கூட சாத்தியமாகலாம். காந்தகாவை எப்படித் துறப்பது என்பதுதான்

சித்தார்த்தனின் கவலை. அந்த வெண்புரவியின் துணையால்தான் யசோதராவுக்கான சுயம்வரப் போட்டியின் வில்வித்தையில் தேவதத்தாவையும், அனிருத்தனை குதிரைப் பந்தயத்திலும், நந்தாவை வாள் சண்டையிலும் அவனால் வெல்ல முடிந்தது.

அப்போதிருந்தே காந்தகா சித்தார்த்தனின் ஒரு அங்கமாகவே இருந்து வந்தது. அதே காந்தகாதான் அரண்மனையிலிருந்து தப்பிச் செல்லவும் உதவியாக இருந்தது. காவலாளிகள் துயில் கொண்டிருந்தபோது அத்தனை இரகசியமாகத் தப்ப முடிந்தது காந்தகாவின் நடையினால்தான். அன்றைய தினம் காந்தகா காற்றைப் போல் நடந்து அவனை அந்த அரண்மனையிலிருந்து வெளியே கொண்டு வந்தது.

"கணிகன் கற்பித்த தியானத்தின் மூலம் சித்தார்த்தனுக்குச் சிலவிஷயங்கள் புரிந்தன. இந்த உலகின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன, அதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வது எப்படி எனக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு அடிப்படையான முதல் செயல், இந்த அரண்மனை வாழ்வையும், இராஜபோகங்களையும், மனைவியையும் மகனையும் துறக்க வேண்டும்."

பணியாளன் சன்னாவையும் காந்தகாவையும் அனோமா நதியைத் தாண்டிய பிறகு பிரிகிறான் சித்தார்த்தன். ஆனால் அது அத்தனை சுலபமாக இல்லை. சன்னா தானும் உடன் வருவேன் எனச் சொல்லி எத்தனையோ போராடினான். அழுதான். அரற்றினான். ம்ஹூம். சித்தார்த்தன் மசியவில்லை. சன்னாவையும் அழைத்துக் கொண்டு ஞானம் தேடினால் அது எங்கே கிடைக்கும்? சாமியார் பூனை வளர்த்த கதைதான். சன்னா தன்னுடன் இருக்கும் வரை தன்னால் ஒரு இளவரசன் என்ற அடையாளம் இழக்காமல் இருக்க முடியுமா? மனதைக் கல்லாக்கிக் கொண்டு திரும்பிப் போ என்றான் சித்தார்த்தன். ஆனால் காந்தகாவின் மௌனம்தான் சித்தார்த்தனைக் கொன்றது. சித்தார்த்தனின் காலில் தன் முகத்தை வைத்துக் கெஞ்சியது அந்த வெண்புரவி.

அதற்கும் சித்தார்த்தன் கலங்கவில்லை எனக் கண்டதும் தலையை உயர்த்தி அவனிடம் தன் கண்களினாலே சொன்னது: தலைவனே, ஊழ்வினையால் நாம் கட்டுண்டிருக்கிறோம். நீயும் நானும் ஒரே நாளில் பிறந்ததும் உன் வாணாள் முழுவதும் நான் உன்னை நிழலாய்ப் பின்தொடர்ந்ததும் தற்செயலானதல்ல. என்னை நீ இப்போது புறக்கணித்துவிட்டுச் சென்றால், நான் என் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்பதை மட்டும் இப்போது சத்தியம் தருகிறேன்.

என் ஆருயிர் நண்பனே காந்தகா, உன்னைப் போல் ஆயிரக்கணக்கானப் புரவிகள் தம்முடல் வெட்டுண்டு உயிரை இழந்து இரத்தச் சகதியில் கிடந்த கனா பற்றி உன்னிடம் எத்தனைமுறைச் சொல்லி வருந்தியிருக்கிறேன்? அதற்கெல்லாம் தீர்வு காண வேண்டாமா? நாம் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் பாசமும் அன்பும் உயிர்களின் விடுதலைக்குக் குறுக்கே நிற்கலாகுமா? போய் விடு காந்தகா, சன்னாவிடம் கொடுத்திருக்கும் என் அரச அடையாளங்களான வஸ்திரங்களையும் ஆபரணங்களையும், தலைமுடியையும் கொண்டு சென்று தந்தையிடம் கொடு, சென்று வா...

சன்னாவுடன் ஆற்றைக் கடந்துவிட்ட காந்தகா ஒருக்கணம் தன் தோழனும் தலைவனுமாயிருந்த சித்தார்த்தனைத் திரும்பிப் பார்த்தது. விடுவிடுவென்று அந்த அடர்ந்த கானகத்துக்குள் சென்று கொண்டிருந்த அவன் உருவம் அப்போது ஒரு நிழலைப்போல் தெரிந்தது.

அரண்மனைக்கு வந்த காந்தகா தலைவன் கொடுத்த பொறுப்பை முடித்த உடனேயே தான் சுமந்து கொண்டிருந்த உடலைத் துறந்து விட்டுத் தன் உலக வாழ்வை முடித்துக் கொண்டது...

நன்றி : **இலக்கிய மலர்-2023**
எனும் நூலிலிருந்து...

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 06.02.2024 அன்று சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
29.01.2024 முதல் 07.02.2024 வரை அரசுமுறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு சென்றபோது
அங்கு Roka நிறுவனத்தின் சர்வதேச இயக்குநர் Mr. Carlos Velazquez மற்றும் இந்திய இயக்குநர் திரு. நிர்மல் குமார்
ஆகியோர் பெருந்துறையில் புதிய குழாய்கள் மற்றும் இணைப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவிடவும்,
இராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வது தொடர்பாகவும்
சந்தித்துப் பேசினார்கள்.

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,